1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS, JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 34-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### கால நிலை

இவ்வாரத்திலே மப்பும், மந்தாரமும் அதிகமாகக் காணப்படுகின்றது. ஆங்காங்கு இடையிடையே மழைபெய்து கொண்டு வருகின்றது. அதனால்கமக்காரர் வயல்களைஉழுது பண்படுத்துவதில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

### பிரதமரின் கரைச்சி விஜயம்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் யாழ்பாணத்துக்கு விஜயஞ்செய்யும்போது, பரந்தனிலே அவரை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வரவேற்பின்பின் அவர் வட்டக்கச்சி, முரசுமோட்டைக் குடியேற்றதலங்களைப் பார்வையிடுவார். இம்மாதம் 30-ந் திகதியன்று கேரைதீவுக்கு விஜயஞ் செய்யும்போது, பூநகரிவாசிகள் அவரை வரவேற்பார்கள்.

### அரிசிஇறக்குமதி குறையும்

இலங்கையிலே அதிகமான நெல் உற்பத்திசெய்யப்படுங்காரணமாகப் பிறநாடுகளிலிருந்து அரிசிஇறக்குமதி செய்வதைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டுவர அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்தப்புதியகொள்கைப்படி, அடுத்துநிகழும் 1955-ம் ஆண்டிலே பர்மாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் இறக்குமதிசெய்யும்அரிசியை ஒருலட்சம்தொன்னால்குறைக்க அரசாங்கம் எண்ணுகின்றது. இதனால் அரிசியைச் சேமித்துவைக்கும்விஷயமாய் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியும் ஓரளவு குறையவிருக்கிறது.

### குறைந்தவிலையில் அரிசி, மா, சீனி

வருகிற கார்த்திகை மாசத்திற்குள் அரிசி, மா, சீனிஆதியாம் முக்கியஉணவுப்பொருட்களின்விலை குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது அதற்குக்காரணம் உலகசந்தைகளிலே இவற்றின் விலை தீவிரமாகக் குறைந்துகொண்டு வருவதேயாகும். அரசினர் இந்தநிலைமையை ஆராய்ந்ததின்பயனாக அரிசி, மா, பாண், சீனியின்விலையைக் குறைக்கலாமென நம்புகின்றனர். தற்போது சீனஅரிசி ஒருதொன்னுக்கு 47 பவுணும், பர்மாஅரிசிஒருதொன்னுக்கு 50 பவுணும் கொடுப்பதற்குப்பதில் அடுத்தவருடத்திலே ஒருதொன்அரிசி 35 பவுணுக்கு வாங்கமுடியுமென உணவு-கமத்தொழில் மந்திரியார் அறிக்கையிட்டிருக்கின்றார். இனிமேல் அவுஸ்திரேலியாவிலிருந்து மா ஒருறாத்தல் 20 சதவீதத்தில் இறக்குமதிசெய்ய அரசாங்கம் பொருத்தஞ்செய்திருக்கிறது. இதுவரை அது மா ஒருறாத்தல் 24·7 சதவீதம் இறக்குமதி செய்து கூப்பனுக்கு றாத்தல் 23 சதவீதம் விற்றுவரலாயிற்று. கூப்பன் கணக்கில் அடங்காது 24 சதமும், 25 சதமுமாக அது விலைப்பட்டது குறைந்தவிலையிலே மாவரத்தொடங்கியதும் பாணின்விலையும் குறைக்கப்படும்.

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி

சென்றஆவணிமாதத்திலே இலங்கையில வாழ்க்கைச்செலவுப்புள்ளி 100 1 ஆகக் குறைந்துபோயிருக்கிறது. இதற்குக்காரணம், எலுமிச்சம்பழம், ஈரவெங்காயம், மரக்கறி, மீன், தேங்காய், உருளைக்கிழங்கு ஆதியவற்றின் விலை குறைந்தமையேயாகும்.

### தற்காலிக தபால்மந்திரி

தபால்-வானொலி மந்திரியாரான திரு. எஸ். நடேசன் அவர்கள் இந்தியாவுக்குச் சென்றிருப்பதால் அவரது பாராளுமன்றக் காரியதரிசியான திரு. என். எச். கீர்த்திரத்ன அவர்கள் சென்ற சனிக்கிழமை தற்காலிக தபால்-வானொலிமந்திரியாக நியமனம்பெற்றுக் கடமைபார்த்துவருகின்றார்.

### மோட்டர்லொறி விபத்து

சென்றதிங்கட்கிழமை எஸ் நாகலிங்கம் என்னும்சாரதியால் செலுத்தப்பட்ட லொறிஒன்று மாதகல்மேற்கிலே வைத்திலிங்கம் நவமணி (வயது 8) வைத்திலிங்கம் சிவபாக்கியம் (வயது 5) எனும் இருசகோதரிகளில்மோதியகாரணமாகச் சிவபாக்கியம்எனும் சிறுமி படுகாயமடைந்து மரணமாயினாள். மல்லாகமஜிஸ்ரேற் விசாரணை நடத்தினார். சாரதி 500ரூபாபிணையில் விடப்பட்டிருக்கிறான்.

### பிரதமரின் தீவுப்பகுதிவிஜயம்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் சமீபத்திலே யாழ்ப்பாணக்குடாநாட்டில் சுற்றுப்பிரயாணஞ் செய்யும்போது, தீவுப் பகுதிக்குஞ் சென்று வேலணை அரசினர்மத்தியகல்லூரியின் புதியகட்டடங்களைத் திறந்துவைப்பார். இன்னும் பகிரங்கவேலைப்பகுதியால் நெடுந்தீவுமக்களின் பிரயாணசேவைக்கென வழங்கப்பட்டிருக்கும் இராசேஸ்வரியென்ற புதியமோட்டர்லோஞ்சின் பிரயாணசேவையையும் ஆரம்பித்துவைப்பாரெனத் தெரியவருகிறது.

### வான் புரண்டது

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற செவ்வாய்க்கிழமை கொடிகாமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டர்வான்ஒன்று கைதடியில்எதிர்பாராதவிதமாகக் கவிழ்ந்தமையால் அதிற்சென்ற வானின்சொந்தக்காரரும், சாரதியுமான தாமோதரம்பிள்ளை என்பவரும், வேறுநால்வரும் காயமடைந்து சாவகச்சேரிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் நிலைமை அபாயகரமன்று.

### பனைவெல்ல உற்பத்திச்சாலை

மன்னார்ப் பகுதியிலே பெரியபனைவெல்ல உற்பத்திச்சாலைஒன்றை அமைக்க அகில - இலங்கைக் காந்தீய சேவாசங்கம் முயன்றுவருகிறது. ஏனெனில், அங்கே பனைவெல்லஉற்பத்திக்கு மிகவாய்ப்பான பலஏதுக்கள் இருக்கின்றன. முந்தமுந்த அங்கே பனைமரங்கள் ஏராளமாக உண்டு. இரண்டாவது, வெல்லங் காய்ச்சத் தேவைப்படும் விறகைக் குறைந்தவிலையிற்பெறலாம். இவைசம்பந்தமாய் மன்னார்ப்பகுதிமக்கள் உதவிசெய்ய முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது.

### நாற்பது கொலைகள்

இலங்கையிலே கொலைகளும், தற்கொலைகளும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருவதைக்காணும் எவர்தான் கவலைகொள்ளாதிருக்கமுடியும்? சென்ற ஆவணிமாதத்தின் முதல் 29 நாட்களிலும் 40கொலைகள் நடந்திருப்பதாகப் பொலிசருக்கு அறிக்கையிடப்பட்டிருக்கிறது. சென்றவார இறுதியிலும் குருநாகலிலும், கம்பகாவிலும் இருகொலைகள் நடந்திருக்கின்றன. குருநாகலிலே கொம்பலாவைச்சேர்ந்த இராசரத்தினம் எனும்ஒருவரும், கம்பகாவிலே ஹார்மானிஸ் சிங்கோ என்பாரும் கொலைசெய்யப்பட்டிருக்கின்றனராம்.

### மா இறக்குமதி

பிறநாடுகளிலிருந்து இலங்கைக்குத் தேவைப்படும் மாவை இறக்குமதி செய்வதைத் தனிப்பட்டவர்த்தகர்களிடம் ஒப்படைப்பதில்லையென்றும், அடுத்த மூன்றுவருடங்களிலும்தானே அதைஇறக்குமதிசெய்வதென்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆனால் மாவைப்பெற்று உள்நாட்டில் வழங்கும்முறைதான் அவர்களிடம் ஒப்படைக்கப்படும். அப்போது இதுசம்பந்தமான அரசாங்கஸ்தாபனம் கலைத்துவிடப்படவிருக்கிறது. உலகசந்தைகளில் கோதுமைமாவின்விலை இறங்கிக்கொண்டுவருவதே அரசினர் இவ்விதம் செய்யக்காரணமாகும்.

### வண்டிச்சவாரிப் போட்டி

யாழ்விநோத களியாட்டவிழாக் கமிற்றியின் ஆதரவிலே இம்மாதம் 4-ம், 5-ம் திகதிகளில்—அதாவது வருகிற சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணமுற்றவெளியில் மாட்டுவண்டிச்சவாரிப் போட்டிஒன்று நடைபெறவிருக்கிறது. இந்தப்போட்டியின் முடிவைக்கொண்டு பரிசுகள் அளிப்பதற்கான சுவீப்ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது. இப்போட்டியில் நாற்பதுவண்டிகள் கலந்துகொள்ளுமெனத் தெரியவருகிறது. கால்மைல் தூரத்துக்கே சவாரி நடத்தப்படும். போட்டியிலே ஒவ்வொரு முறையும் நான்குவண்டிகள் கலந்துகொள்ளும். இதில் முதலிடம்பெறும் வண்டிக்கு ஒருவெள்ளிக்கிண்ணமும், 150 ரூபாவும் பரிசிலாக வழங்கப்படும். இரண்டாம், மூன்றும் இடங்களைவகிக்கும் வண்டிகளுக்குப் பணப் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

### உணவுப்பொருளும் சகாயப்பணமும்

அரசாங்கம் கூடியவிலையிலே மாவை வாங்கிக் குறைந்தவிலையில் அதனைவிற்கும்படியாகத் தற்சமயம் வருடம் ஒன்றுக்கு 1 கோடியே 80 லட்சம்ரூபா சகாயபணமாக உதவுகின்றது. ஆனால், மாவின்விலை இறங்குமிடத்து அரசாங்கம் இந்தஉதவிப்பணத்தில் பெருந்தொகையை மிச்சம்பிடிக்கக் கூடியதாயிருக்கும். சீனஅரிசியின்விலையும் குறைக்கப்படுமென்பது தற்போது ஏறக்குறைய நிச்சயமாகிவிட்டது. அதனால்அரிசிவிஷயமாய்ச்சீனியைவிற்றெடுத்த ஆதாயப்பணத்திலிருந்து அரசாங்கம்உதவிவந்த சகாயப்பணத்திலும் கோடிக்கணக்கானரூபாக்களை அது மிச்சம்பிடிக்கக் கூடியதாகும். சீனிவிற்பனவாலே அரசாங்கம் தற்போது வருடம்ஒன்றுக்குப் 10 கோடி ரூபா வரையில் ஆதாயம்பெற்று வருகிறது. அரிசிவிலை இறங்குவதாலே சீனியிலிருந்துபெற்ற ஆதாயப்பணங்கொண்டு அரிசிக்குஉதவிய சகாயபணமும் குறையுமாகையால் சீனியின்விலையும் குறையஇடமுண்டாகும்.

### நூல்நிலயத்திற்கு நன்கொடை

யாழ்ப்பாணத்திலே அமைக்கப்படவிருக்கும் நூல்நிலயம் விரைவிலே இந்தியஅரசாங்கத்தினிடமிருந்து நன்கொடையாகப் பதினாயிரம்ரூபா பெறவிருக்கின்றது. இந்த நன்கொடையானது புதியநூல்நிலயக் கட்டடத்தின் ஒரு பகுதியைக் கட்டுவதிலே செலவிடப்படுமாறு இலங்கையிலுள்ள இந்திய ஹைகம்மிஷனரான திரு. சி. சி. தேசாய் அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது.

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே முதன்முதலாக விசாரணைக்குஎடுத்துக்கொண்ட அளவெட்டிக் கொலைஎத்தனவழக்கில் சாட்சியம் திருப்திகரமாய் இல்லாமையால் வழக்குத் தள்ளுப்படலாயிற்று. இதிலே கார்ச்சாரதியான வைரவி மார்க்கண்டுவையும், அந்தக் காரிலிருந்த சரவணமுத்து, ஐயாத்துரை ஆதியோரையும் கொலைசெய்ய எத்தனித்தார்களென்று அளவெட்டிவாசிகளான சு. செல்லத்துரை, அ. முத்துலிங்கம், கா. இரத்தினம், வே. வடிவேலு, மா. செல்லப்பா எனும் ஐவரும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்கள்.

இரண்டாவதாக — வவுனியாவிலே கருணாகாளிக்குளவாசியான தம்பு சுந்தரம்பிள்ளை சென்றவருடம் வைகாசிமாதம் 29-ந் திகதியன்று தனதுமாமனான என். வன்னியசிங்கத்தை ஓர்துப்பாக்கிகொண்டு சுட்டுக்கொன்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்குவிசாரணைக்குள்ளாய் முடிவில் தள்ளுப்படலாயிற்று.

### புகையிலைக்கம்மிஷன் விசாரணை

புகையிலைக்கம்மிஷன் யாழ்ப்பாணம் வந்து இம்மாதம் 6-ம், 7-ம் திகதிகளிலே காலை 10 மணிமுதல் றசெல்ஸ்குயரிலுள்ள சுகாதாரசங்க காரியாலயத்திலும், 8-ந் திகதிகாலை 10மணிமுதல் காங்கேசன்துறையிலுள்ள சீமெந்துத் தொழிற்சாலை விருந்தினர் விடுதியிலும், 9 ந் திகதிகாலை 10-30 மணிமுதல் ஊர்காவற்றுறை வாடிவீட்டிலும், 10-ந் திகதிகாலை 10-30மணிமுதல் பருத்தித்துறை வாடிவீட்டிலும், 1-ந் திகதி காலை 10-30மணிமுகல் சாவகச்சேரி வாடிவீட்டிலும், 13-ந் திகதிகாலை 10 மணிமுதல் றசெல்ஸ்குயரிலுள்ள சுகாதாரசங்க காரியாலயத்திலும் கூடிவிசாரணை நடத்தியபின் திரிகோணமலை சென்று மறுநாள் 2-30 மணிமுதல் அங்கு விசாரணைநடத்த விருக்கிறது.

---

● அடுத்துநிகழும் 1955-ம் ஆண்டு ஆனிமாதம் 20-ந்திகதியன்று சூரியகிரகணம்ஒன்று ஏற்படவிருக்கிறது. இந்தக்கிரகணம் இலங்கையின் கிழக்குக் கரையிலிருந்தும் பார்க்கக் கூடியதாக இருக்கும். இதனை அவதானித்து ஆராய்ச்சிநடத்த லண்டன்நகரரோயல் வானசாஸ்திரசபை இப்போதே ஒரு கோஷ்டியை ஒழுங்குசெய்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவா? அன்றேல் கடவுளின் குரலா?

பரிஸ்நகரின்மத்தியில் ஜெயராக்கினி மாதாகோவில் இருக்கிறது. அதைக் கண்காணிக்கும்படி 1832-ம் ஆண்டு ஒருவாலிபகுருவானவர் நியமிக்கப்பட்டார். அவருடையபெயர் தெ ஜெனெத். அந்தப்பெரிய விசாரணைப்பங்கில் இருபத்தேழாயிரம் கிறீஸ்தவர்கள். அவர்கள் பேருக்குமாத்திரமே கத்தோலிக்கர். அவர்களிற்பெரும்பாலோர் வேதகடமைகளை அனுசரிப்பதை விட்டுவிட்டனர்.

புதியகுருவானவர் ஓர்பரிசுத்தவான். தமதுக்றீஸ்தவர்களின் சுகபோக பிரியத்தைக்கண்டு கவலைகொண்டு அவர்களை மனந்திருப்பும்படி செபம், தபம், உழைப்புஎன்னும் வழிகளைக்கையாடினர். ஆத்துமங்களைக் கெடுக்கத்தேடும் பிசாசு தன்வசம் அகப்பட்டிருப்பவர்களை எளிதில் விடுபவனல்ல. அவருக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தியதுடன் அதைரியத்தையும் அவர்மனதில் நுழைத்துவந்தது. ஒருநாள் அவர் பூசைப்பலி தொடங்குகையில் "இந்தப்பங்கில் என்வேலை முற்றிலும்பயனற்றது; மேலும்மேலும் முயல்வதுவீண்; உடனே இந்த இடத்தைவிட்டு வெளியேறுவதே மேல்" என்னும்எண்ணம் அவரை ஆட்கொண்டது. அந்தநினைவை அகற்றமுயன்றும் அவரால் முடியவில்லை. "நீ ஒன்றுமே செய்வதில்லை; உன்வேலைபயனற்றது; நீவந்து நான்கு ஆண்டுகளாகியும் என்னலாபம்? உடனேவெளியேறு" என ஒருகுரல்அவருள்ளத்தில் கூறுவதாகத் தோன்றியது.

அந்த நல்ல குருவானவரின் உள்ளத்தில் நடந்தயுத்தம் எவ்வளவுஅகோரமாய் இருந்ததென்றால், அவருக்கு ஓரேவியர்வை உண்டாயிற்று. இந்நிலையிலே பூசையில் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்னும் செபம்சொல்லுகிறவரை உபாதைப்பட்டார். தேவவசீகர வார்த்தைகளைத்தக்கவிதமாய்ச்சொல்லவேண்டுமானல் இந்தச்சோதனை அகலவேண்டும். அதைஅகற்றும்படி அவர் கடவுளைப்பார்த்து உருக்கமாகமன்றுடினர். அவருடையமன்றாட்டு முடிந்ததும், "உன்விசாரணைப்பங்கைப் பரிசுத்தமரியாயின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடு" என்னும்வார்த்தைகள்அவர் உள்ளத்தில் தெளிவாகக் கேட்டன. அதிலிருந்து அமைதி ஏற்பட்டது. சிரமமின்றிப் பூசையைத் தொடர்ந்துமுடித்தார். பூசை முடிந்தது. திருஉடைகளைக் கழற்றுகையில் ஒருசந்தேகம். இது வெறும் கனவா? அன்றேல் கடவுளின் குரலா?

நன்றிசெலுத்தி முடிந்ததும், "உன் விசாரணைப்பங்கைப் பரிசுத்த மரியாயின் மாசற்றஇருதயத்துக்கு ஒப்புக்கொடு" என்னும்வசனங்கள் திரும்பவும்கேட்டன. தேவமாதாபக்தி மிக நன்மை விளைவிக்குமென அறிந்த சுவாமியார் மரியாயின் மாசற்றஇருதயச் சபைஒன்று தொடங்கத் தீர்மானித்து அதற்காகச் சிலசாதாரண ஒழுங்குகளைஎழுதினர். அதிமேற்றிராணியார் அவைகளை அங்கீகரித்தார். "பாவிகளின் மனந்திரும்புதலுக்காக மரியாயின்மாசற்ற இருதயத்தின் வழியாகத் தேவஇரக்கத்தைக் கேட்குமன்றாடும்படி இன்றுமாலை 7 மணிக்கு விசேஷ பக்திமுயற்சிகள் நடைபெறும்" என மறுஞாயிற்றுக்கிழமை எல்லாப்பூசைகளிலும் அறிவிக்கப்பட்டது.

பூசைக்குப்பின் அவர்சக்றிஸ்தைக்குச்சென்றார். சிலகாலமாகத் தேவதிரவிய அனுமானங்கள்பெறாத இருவியாபாரிகள்வந்து பாவசங்கீர்த்தனம் செய்தனர். இது அவருக்கு உற்சாகத்தைக் கொடுத்தபோதிலும், நாற்பது அல்லது ஐம்பதுபேரே மாலைப்பக்தி முயற்சிகளுக்கு வருவார்களென அவர் நினைத்தார். நானூறு ஐந்நூறுபேர் வந்தனர். எனினும்மக்கள் தேவதிரவிய அனுமானங்களை நாடவில்லை. தேவதாயைப்பற்றி அவர் ஒருசிறுபிரசங்கம் செய்தார். அது மக்கள்மனதில் மாற்றத்தை உண்டாக்கியதாகத் தோன்றவில்லை. உடனே அவர் தேவதாயாரது பீடத்தின்முன் முழந்தாளிட்டு மாதாவின் பிரார்த்தனையைத் தொடங்கினர். "பாவிகளுக்கு அடைக்கலமே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்" என்றமன்றாட்டுக்கு வந்ததும் அங்கிருந்தோர் யாவரும் திரண்டு அதை மும்முறை திருப்பிச் சொன்னது சுவாமியாருக்குப் பெரும் வியப்பைத்தந்தது.

எதிர்பாராத இச் சம்பவத்தைக் கவனித்த அவர்மகிழ்ந்து, தம்மையும் தமதுவிசாரணைப்பங்கையும், தாம்ஸ்தாபிக்கவிருந்த சபையையும் மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்தார். தமது தீர்மானம் கடவுளுக்குப் பிரியமானதாஎன்றுஅறியும்படி அவர் கடவுளிடம ஒருபேருதவி கேட்டார். நகரில் முக்கிபமான ஒருமனிதன் கத்தோலிக்க திருச்சபையைவிட்டு விலகியிருந்தான். அவன் மனந்திரும்பும்படி மன்றாடினர்.

தேவதாயார் உடனேதானே பதிலளித்தாள். அந்தமனிதன் மனந்திரும்பினன். சிலநாட்களில் அந்தவிசாரணைப்பங்கில் பெரும்மாற்றம். மரியாயின் மாசற்ற இருதயச்சபை யாரும்எதிர்பாராத விதமாசப்பரவியது. அந்தத் திரு சேத்திரத்தில் (ஜெயராக்கினி மாதாகோவிலில்) சொல்லப்படும் செபங்களுக்கு விசேஷ வல்லமை உண்டுஎன்றசெய்தி ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பரவியது. ஒவ்வொருநாளும் பலர்மனந்திரும்பினர். கன்னெஞ்சரானபாவிகள் கடவுளுடன் சமாதானமானர்கள். வேத காரியங்களில் கவலையற்றிருந்தோர் பத்தி உருக்கமுள்ளோரானர்கள்.

ஜெயராக்கினி மாதாகோவில் விசாரணைப்பங்குக் கிறீஸ்தவர்கள் இருந்த நிலையில்தான் தற்போதைய உலகம் இருக்கிறது. "எண்ணமுடியாத நமது சகோதர, சகோதரிகள் தப்பறையான கொள்கைகளால் குருடராகி, ஆசாபாசங்களினல் இழுக்கப்பட்டுக் கடவுளைவிட்டு வெகுதூரம் போய்விட்டார்கள். கிறீஸ்துநாதருடைய விரோதிகளின்தொகை அதிகரித்துக்கொண்டு போகிறது. பொய்க் கொள்கைகளைப் போதிப்போர் வெகுமுயற்சியாயிருக்கிறார்கள். தேவதூஷணங்கள், தேவதுரோகங்கள், சரீரத்தினல் செய்யப்படும் வெட்கத்துக்குரிய பாவாக்கிரமங்கள் முதலியன நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. வாழ்க்கையில் எவ்வளவுஇன்பம் அடையமுடியுமோ அவ்வளவையும் அடையவேண்டும்என்பதே கணக்கற்றமக்களின் ஏக நோக்கமாயிருக்கிறது" எனப் பாப்பாசர்கூறுகிறார்.

சில ஆண்டுகளுக்குமுன் அவர்மானிடசந்ததியை மரியாயின்மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்து, மேற்றிராசனங்களும், விசாரணைப்பங்குகளும், குடும்பங்களும் தங்களையே ஒப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். குடும்பங்கள் தங்களைவெறுமனே ஒப்புக்கொடுத்தால்மாத்திரம் போதாது மாமரியைத் தங்கள் இல்லங்களின் அரசியாக்கவேண்டும் திருஇருதய அரசாட்சி பலஇல்லங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. யேசுவின் திரு இருதயப்படத்தை அல்லதுசுரூபத்தை

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

## தெ காஸ்பெறியின் மறைவு

புதியஇத்தாலியின் சரித்திரத்திலே மிகவும்நெருக்கடியான ஓர்காலத்தில் 1945-ம் ஆண்டுமுதல் 1953-ம் ஆண்டு வரையில் பிரதம மந்திரியாராயிருந்து அந்நாடு சிதைவுறாவண்ணம் காப்பாற்றிவைத்த சிஞ்ஞோர்ஆல்ஸித் தெ காஸ்பெறிஅவர்கள் ஆவணி 19-ந் திகதியன்று வடஇத்தாலியிலே திரெண்தோ நகருக்கு அருகாமையிலுள்ள தமது கோடை-காலவாச பங்களாவில் இறந்தார் ஐரோப்பிய பாதுகாப்பு மண்டலம் (European Defence Community) அமைப்புசம்பந்தமாகப் புதிய பிராஞ்சியஅரசாங்கம் காட்டிவரும் மனப்பான்மையால் காஸ்பெறிஅவர்கள் பெரிதும்கவலையுற்றிருந்தார். சனநாயக கொள்கைகளை ஆதரிக்கும் ஐரோப்பியநாடுகள் தங்களுக்குள் ஒரு பலமான ஒற்றுமைப்பிணிப்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கருதி இவர்மேற்குஜேர்மனியின் தலைவராகிய டக்றர் அடெனேர் அவர்களோடும், சிலகாலத்திற்குமுன் பிராஞ்சிய வெளிநாட்டு மந்திரியாராயிருந்த ஷுமன் அவர்களோடும் சேர்ந்து அயராது உழைத்துவந்தார். ஆனல், மெணடெஸ் பிரான்ஸ்எனபவர் பிராஞ்சிய பிரதமரானதும், தாம் வகுத்ததிட்டம்சிதைவுறும்போல் இருப்பதையும், சிலஇத்தாலிய அரசியல்வாதிகள்கூட மெண்டஸ்-பிரான்ஸை ஆதரிக்குமவகையில் பேசுவதையும எழுதுவதையும கண்டபோது காஸ்பெறியின்மனதில் கவலையும், கலக்கமும் ஏற்பட்டன. பிறசெல்ஸ் நகரில் ஐரோப்பியபாதுகாப்பு மகாநாடு தொடங்குவதற்குமுன் காஸ்பெறி அவர்கள் தெல்லிபோனைஎடுத்து இப்பொழுது இத்தாலிய பிரதமராயிருக்கும் சிஞ்ஞோர்செல்பா அவர்களுடன் பேசி ஐரோப்பிய பாதுகாப்புத்திட்டத்தைக்காப்பாற்றச் சகலவிதமுற்சிகளும் எடுத்துக்கொள்ளுமாறு கதறினர், இல்லை அழுதார்என்றே சொல்லலாம். ஆயினும் தமதுகோரிக்கை நிறைவேறாதுஎன்று அவர் ஊகித்துக்கொண்டார். அன்றிரவு 2 மணிக்குஅவர்பெருமூச்சு விடுவதைக்கேட்டு அவர்பாரியார் விழித்தெழுந்தார். "எனதுஇருதயம் இதற்குமேல் தாங்கமுடியாது" என்றார்அவர், பங்குவிசாரணை சுவாமியாருக்கு ஆள்அனுப்பினர். தொன் லூய்கி கிராந்திசுவாமியார் அவஸ்தைப்பூசுதல் கொடுத்துமுடிந்ததும் காஸ்பெறி "என்னைநேசிப்பவர்கள் எல்லோருக்கும் பிரியாவிடைகூறுகிறேன்" என்றார். 2-30 மணிக்கு இன்னும புத்திச்சுவாதீனத்தோடுஇருக்க, அவரதுமக்களுள் மூன்றுகுமாரத்திகளும், பேரப்பிள்ளைகளும் கட்டிலைச் சூழ்ந்திருக்க, சிஞ்ஞோர் ஆல்ஸித் தெ காஸ்பெறி அவர்கள் "யேசுவே, யேசுவே" என்று இருமுறை கூறியபின் அவரதுஉடலைவிட்டு உயிர்பிரிந்தது.

காஸ்பெறி 1881-ம்ஆண்டிலே, அப்பொழுது ஆஸ்திரிய-ஹங்கேரியென்ற இராச்சியத்தின் ஒருபகுதியாயிருந்த தென் டைறோலில்பிறந்தவர். இத்தாலியமக்களையே கொண்டிருந்த இப்பகுதி முதலாவது உலகயுத்தத்திற்குப் பின் 1919-ம்ஆண்டு ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பயனுக மீண்டும் இத்தாலியுடன் சேர்ந்தது. அவர் தேசியவாழ்வில் கலந்து, இத்தாலிய சட்டசபை அங்கத்தினரானர். 1948-ம் ஆண்டு கம்யூனிஸ்தர்களுக்கும், சனநாயககட்சியினருக்கும் மிகவும்கடுமையானபோட்டி இருந்தபோதிலும் இவர் பெருவாரியானவாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946-ம் ஆண்டுமுதல் 1953-ம் ஆண்டுவரையில் இவர் பிரதமராயிருந்து நாட்டிற்கு அரும்பெரும்சேவைசெய்து கம்யூனிஸ்தர்களின் தேசதுரோகமுயற்சிகளைத் தடுக்க அயராது பாடுபட்டுவந்தார்.

இவர் உத்தமகத்தோலிக்கர். அரசியல் நடவடிக்கைகளில் எப்பொழுதும் யதார்த்தமாகவும், நாணயமாகவும் [illegible] பெயர் எடுத்தவர். இவர்இறந்தது இத்தாலிக்குமட்டுமல்ல சனநாயகஉலக முழுவதற்குமே பரிகரிக்கமுடியாத நஷ்டமாகும்.

## மாதாவின்கூட்டத் திருநாள்

பேசாலை விசாரணைப்பங்கைச் சேர்ந்த தள்ளுகுட்டிக் குடியிருப்புக் கிராமத்திலே வழமைபோலத் தேவமாதாகூட்டத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. அதற்கு ஆயத்தமாகச் சனிக்கிழமைமாலை 7 மணிக்கு இக்கிராமத்தைச் சூழவுள்ள கிராமங்களைச்சேர்ந்த கிறீஸ்தவர்களும் வந்து கோவிலில் குழுமியிருக்கக் கட்டளைக்குரவர் வண. அ. லெபோன் சுவாமியவர்களால் வேஸ்பர்பாடியதும் திருச்சுரூபஎழுந்தேற்றம் செய்யப்படலாயிற்று. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30மணிக்கு நிறைவேறிய திவ்வியபூசையிலே சுவாமியவர்கள் "பெண்ணலேஇழந்த இரட்சணியத்தை மீண்டும் பெண்ணலேயே பெறவேண்டும்" என்ற மேற்கோளுடன் அரியதோர் பிரசங்கஞ்செய்தார். ஆரம்பத்திற்கிசையப் புதியஏவாளாகியமாதாவின் நாமம்பூண்ட இந்தக்கூட்டத்தில் சேர்ந்துள்ள பெணமணிகளாலேயே இவ்வூர்திருந்தி வரப்பிரசாதத்தால் நிரமபவேண்டுமெனக் குறிப்பிட்டார். பூசைமுடிந்ததும் பூக்களால சிங்காரிக்கப்பெற்ற பொற்கூட்டிலே தேவமாதா சுரூபம் வைக்கப்பெற்றுப் பெணமணிகளே தாங்கிச்செல்ல, பாமாலையும், செபமாலையும் சூட்டித் தேவதாயாரை மகிமைப்படுத்தியமை ஓர்பெருமகாட்சியாகஇருந்தது. திருச்சுரூபம் ஆலயம் வந்துசேர்ந்ததும் வண. சுவாமியவர்கள் "இக்கிராமம் தோன்றியகாலத்தில் இன்றுவரை இல்லாதவிதமாக இத்திருநாளை எல்லோரும் ஒரேமனப்பான்மையுடனும், பக்தியுடனும் கொண்டாடியது தமக்குமிகவும் சந்தோஷமெனக்கூறித் திருச்சுரூபஆசீர்வாதம் அருளினர். பின்னர்பாடசாலைமண்டபத்தில் நடைபெற்ற இனியசிற்றுண்டி உபசாரணையுடனும், சுவாமியவர்களை மத்தியாகக்கொண்டு புகைப்படம்பிடிக்கப்பட்டதோடும் திருநாள் இனிதே முடிவுற்றது.

ச. வெற்றிமேரி

## மாணவரும் நாற்றுநடுகையும்

வடமேல்மாகாணக் கமத்தொழில் அபிவிருத்தி இயக்கப் போட்டியில் முதன்முறையாகப் பங்குபற்றிய போளவத்தைக் கத்தோலிக்க தமிழ்ஆண் பாடசாலை மாணவர்களால் இங்குள்ள ஆலயத்துக்குச் சொந்தமான தாய்க் கால்ஏக்கர்கொண்டதும், பசளையிட்டுப் பண்படுத்தப்பட்டதுமான வயலில் மாகாணப்பகுதிக் கமத்தொழிற்பரிசோதகர் திரு. டபிள்யு. அன்ரனி பொன்னண்டோ அவர்கள் தலைமையில் 24-8-54 காலை 9மணிக்கு நாற்றுநடுகைப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. செயற்கை உரமிடுதல், நாற்றுநடுதல் பற்றியமுறைகளைத் தலைவர்அவர்கள் நடைமுறையில் செய்து காட்டினர். பின்னர்தலைமையாசிரியர் தமதுஉடன் ஆசிரியர்களுடன் வேண்டும் உதவியளிக்க, திரு. டபிள்யு. எச். திதோர உதவியாசிரியரின் மேற்பார்வையிலே நாற்றுகள்நடப்பட்டன. இடைவேளை பணணைநிலத் தலைமைக்காரர் திரு. டபிள்யு. அகிரியான் பெர்னண்டோ அவர்கள் சிற்றுண்டியும், தேநீரும் அளித்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்தினர். அதனல் மாணவர்கள் சோர்வுறாது மலர்ந்த முகங்களுடன் ஆர்வங்காட்டித் தொடர்ந்துவேலைசெய்தனர். பிற்பகல் 2 மணியளவில் நாற்றுநடுகை வெற்றிகரமாக முடிவாயிற்று.

டபிள்யு. ஸ்ரீபன் லோவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்



## ஆழ்கடலில் கிறீஸ்துநாதர்

இத்தாலியில் சான் புறுட்டு வோசோளனும் சிறியமீன்பிடி கிராமம ஒன்றுள்ளது. இந்தக் கிராமத்தின் குடாக்கடற் தண்ணீருள் "ஆழ்கடலின் கிறீஸ்து நாதர்" எனப்பெயரிய கிறீஸ்து நாதரின் உயர்ந்த வெண்கலச் சுரூபம்ஒன்று இறக்கி ஸ்தாபகஞ் செய்யப்பட்டபோது, கடலின்கீழ் தொழிலநடத்தும் நூற்றுக்கணக்கான கடற்தொழிலாளர்களும், சுழியோடிகளும் கவனித்துநின்றார்களெனச் சென்ற ஞாயிற்றுக்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. எட்டரைஅடிஉயரமும், எண்பத தொன்னுக்கு மேற்பட்டநிறையுமுள்ள இந்தவெண்கலச்சுரூபம் கடலின்கீழுள்ள ஓர்கொங்கிறீற் ஆதாரபீடத்தின்மேல் நிறுவி நிற்கின்றது. இஃது கடற்தொழிலாளர்களும், கப்பலோட்டிகளும், கடற்பந்தையவிளையாட்டுக்காரருமாகக் கடலில் இறந்தவர்களின் ஞாபக சின்னமாக இருந்துவரும். இற்றைக்கு நூறுவருடங்களின்முன் ஓர்புயலில்அகப்பட்டுக்கொண்ட ஓர்பிரித்தானியகப்பல் மூழ்கிய இடத்திற்குச் சமீபமாக இந்தச் சுரூபம இருக்கின்றது. அப்போது இந்தக்கப்பல் கிறிமிய யுத்தத்தில் ருஷியர்களைஎதிர்த்துப் போராடுதற்கென்று நேசதேசங்களின் சாடினியஇராச்சியத்தைச்சேர்ந்த போர்வீரர்களை ஏற்றியிறக்கிக்கொண்டிருந்தது. உலகில் தண்ணீரின்கீழுள்ள கிறீஸ்துநாதரின் முதலாவதுதிருச்சுரூபம் இதுவாகும். காலகதியில் இந்தஇடம் ஓர்திருசேத்திரமாகுமென நம்பப்படுகிறது. யாத்திரிகர்கள் அந்தக்குடாக்கடலிலே தண்ணீருக்குக்கீழ் 35 அடி ஆழத்திலே ஓர்கற்பார்மேட்டின்மீது நிறுவிநிற்கும் இந்தச்சுரூபத்தைப் பார்க்கக்கூடியோராவார்கள்.

## பிறெடெறிக்குகளின் சபை

நீர் ஓர்உத்தம கத்தோலிக்கராய் இருந்தால் ஸ்பானியதேச பார்சலோனநகரிலுள்ள அர்ச். பிறெடெறிக்கின் சபையிற்சேர அனுமதிககப்படுவீர். இந்தச் சபை தற்சமையம் தனது 75-ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றது. ஆயினும் இதிற்சேர மற்றுமோர் நிபந்தனை உள்ளது. அதாவது உமது நாமம் பிறெடெறிக், அல்லது பிறெடெறிக்காவாக இருக்க வேண்டும். தான்நிலைபெற்றுள்ள 75ஆண்டுகளிலும் இந்த நாமக்களையுடையவர்களால் 5,000 அங்கத்தவர்களை இந்தச்சபை கொண்டிருந்தது. அதிலே இன்று 524 அங்கத்தவர்கள் இருந்துவருகின்றார்கள். இவர்களிலே முன்னர் ஸ்பெயினிடமாக வத்திக்கானின் ஸ்தானீகராகவிருந்த கருதினல் பிறெடெறிக்கோ ரெருடஸ்கினி ஆண்டவரும், எட்டுஸ்பானிய ஜெனறல்களும் அடங்குவார்கள். அர்ச். பிறெடெறிக் ஒல்லாந்திலே உட்ரெச்ற்நகர் மேற்றிராணியாராயிருந்து 838-ம் ஆண்டு வேதசாட்சியாக மரணமடைந்தார். இவரே அச்சபையின் பாதுகாவலர்.

## மனந்திரும்பிய பிரபலஸ்தர்கள்

கீர்த்திவாய்ந்த "றேடியோ ஸ்ரார்"—அதாவது வானொலிப் பேச்சாளரான பென் வியன் அவர்கள் மனந்திரும்பிச் சென்றஆடிமாதம் 31-ந் திகதியன்று லண்டன் நகரிலே ஹென்டன் எனுமிடத்திலுள்ள வியாகுலமாதாவின் கோவிலில் வண. டெ பெலிஸி சுவாமியாரால் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்படலாயினர். அப்போது சினிமாக் கைத்தொழிலில் பிரஸ்தாபம் பெற்றவரான திரு. ரி. சி. றெட்டின் அவர்கள் இவரது ஞானத் தந்தையாயினர். அதேவேளை அவருடன் திருச்சபையிற்சேர்ந்துகொண்ட வேறிருவர்களில் பிரபலசங்கீதஆசிரியரான திரு. லோறென்சோ மெடியா அவர்கள்ஒருவர். மற்றொருவர் டக்றர் ஹரிதோண்ரன், எம். ஆர். சி. எஸ்., எல். ஆர். சி. பி. அவர்கள். இவர் படிங்ரனிலுள்ள அர்ச். மரியநாயகியின் ஆஸ்பத்திரிக்கும், சமாரித்தன் இலவச ஆஸ்பத்திரிக்கும் மயக்கமருந்து சம்பந்தமான ஆலோசகராக இருந்து வருகின்றார் டக்றர் தோண்ரன் அவர்கள் கல்கத்தாவின் முன்னாள் அங்கிளிக்கன் சபை பிஷப்பின் பேரப்பிள்ளை முறையானவர்.

## காசரோகியான புதியகுரவர்

நோயாளரான 236 இத்தாலியகுருமார் லூர்துபதிக்குநடத்திய யாத்திரையின்போது காசநோய் கண்டுவருந்திய தியாக்கோன்ஒருவர் குருத்துவாபிஷேகம் செய்யப்படலாயினர். அவர் லூர்துபதித் திருசேத்திரத்திலே தமக்குக் குருப்பட்டம் அருளியவரும், திருச்சடங்காசார முறைகளின் திருச்சங்க காரியதரிசியுமான 93 வயதுடைய காறின்சி அதிமேற்றிராணியார் துணைபுரியத் தமதுமுதற்பூசையை நிறைவேற்றினர். நோயாளிகளான இந்தக் குருப்பிரசாதிகள் இத்தாலியின் சகலபகுதிகளிலிருந்தும், சிசிலி, சாடினியா தீவுகளிலிருந்தும் சென்றிருந்தார்கள். நாற்பது பெட்டிகள் கொண்ட விசேஷ றெயின்வண்டிஒன்றில் இவர்கள் அங்குபோய்ச் சேர்ந்தார்கள். இவர்களில் இருபது பேர் சில்லுஆசனங்களில் சென்றார்கள். இதவருடாந்தயாத்திரை நோயாளரான வண. லூய்ஜி நொவாறெஸி சுவாமியாராலே ஒழுங்குசெய்யப் படலாயிற்று. இந்தக் குருயாத்திரிகர்களின் பிரயாணத்தின்போது அவர்களுக்குத்தேவையான உணவில் பெரும்பகுதியைப் பாப்பரசரே வழங்கலாயினர்.

## அணுக்குண்டு விசப்பட்டநகர்

இரண்டாவது உலகயுத்தத்தின்போது ஜப்பானிலே இருநூற்றுக்குமேற்பட்ட புத்தகோவில்களைக்கொண்ட ஹிரோஷிமாநகரில் முதல்அணுக்குண்டு வீசப்பட்ட ஒன்பதாவதுஆண்டு நிறைவுஞாபகதினம் சமீபத்தில் வந்தபோது, மோட்சாரோபணமாதாபேரால் அங்கு கட்டியெழுப்பப்பெற்ற ஞாபகார்த்தகோவில்ஒன்று அபிஷேகஞ்செய்யப்படலாயிற்று. கத்தோலிக்கரும், கத்தோலிக்கர் அல்லாதாருமான ஜப்பானியர்களிடமிருந்தும், மற்றும்அநேக பிறநாடுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் நிதிசேகரித்துக் கட்டப்பெற்ற ஓர்சர்வதேச ஞாபகார்த்தகோவில் இதுவாகும். ஜப்பானிலே இரண்டாவது அணுக்குண்டு வீசப்பட்ட நாகாசகி நகரின் யமாக்குச்சி மேற்றிராணியாரால் இதுஅபிஷேகஞ் செய்யப்படலாயிற்று. அத்திருவைபவத்தின்போது சமுகங்கொடுத்திருந்தவர்களில் அதிகமானோர் கத்தோலிக்கர் அல்லாதோரே. அவர்களில் ஒருகூட்டம்புத்தகுருமாரும் அடங்கியிருந்தனர். சாயந்தரம் ஜப்பானியஹிரோஹிற்றோ சக்கிரவர்த்தியின் இளைய சகோதரரான ரகாமற்சு இளவரசர் அந்நகரில் 1945-ம்ஆண்டு அணுக்குண்டுவீசப்பட்டபோது உயிரிழந்த 1,30,000 பேருக்காகவும் நிறைவேறிய துக்கப் பாடற்பூசைக்குச் சமுகமளித்திருந்தார். இந்தக்கோவிலுக்கென்று நிதிசேகரித்துதவிய தேசியகமிற்றிக்குத் தலைமைவகித்திருந்தவர் இவரே.

## கம்யூனிஸ்தநாடுகளில் கத்தோலிக்கர்

கம்யூனிஸம் போலாந்தைக் கைப்பற்றியபோதுதான் அது கத்தோலிக்கர்விஷயமாய் மிகப் பெரும்வெற்றியை ஈட்டிக்கொள்ளலாயிற்று. அப்போது அதன் ஆதிக்கத்தின்கீழ் 2கோடியே 10லட்சம் கத்தோலிக்கர் அகப்பட்டுக்கொண்டார்கள். ஏனைய இரும்புத்திரைநாடுகளில் செக்கோசிலவாகியாவில் 93லட்சம் பேரும்ஹங்கேரியில்61லட்சத்து 25 ஆயிரம்பேரும், யூகோசிலேவியாவில் 55 லட்சம்பேரும், ருமேனியாவில் 30லட்சம்பேருமாகக் கத்தோலிக்கர் இருந்துவருகின்றார்கள். அதாவது உலகமுழுவதிலும் இருந்துவருகின்ற 45கோடி கத்தோலிக்கருள்ளும் நூற்றுக்குப் 15விகிதமானோர் இரும்புத்திரைநாடுகளில் இருந்துவருகிறார்கள்.

## இரும்புத்திரைக்குப் பின்னல்

இந்தோசீனவிலே வடவியெற்னமையும கம்யூனிஸ்தர்கள் அடிப்படுத்திக் கொண்டமையால் தற்போது உலகமுழுவதிலும் அவர்களது ஆதிக்கத்தின் கீழுள்ள மக்களின் தொகை ஏறக்குறைய எண்பது கோடியாக அதிகரித்திருக்கிறது. இவர்களில் 6கோடியே 35லட்சம்பேர் கத்தோலிக்கராவர். வடவியெற்னமிலிருந்து பிரான்சியபடைகள் வெளியேறியமையாலே 12லட்சம் கத்தோலிக்கர் உட்பட, ஏறக்குறைய 1கோடியே 80லட்சம் பேருக்கு மேற்பட்டமக்கள் மேலும் இரும்புத்திரைக்குப்பின்னல் அகப்பட்டுத்தவிக்கின்றார்கள். அதனல் தற்போது கம்யூனிஸ்த ஆதிக்கத்தில் எல்லாமாக 78கோடியே 49லட்சத்து 50ஆயிரம்மக்கள் இருந்துவருகின்றார்கள்.

## வீதிகளின் குருமார்

சமீபத்திலே குருப்பட்டம்பெற்றுள்ள வண. கலம்பாசுவாமியார் ஓர் வீதிக்குருவானவர் ஆவர். வீதிகளில் அலைந்துதிரியும் பிள்ளைகளுக்குத் தொண்டாற்றிவருகின்ற வண. அமெரிக்கோசுவாமியாருடன்சேர்ந்து வேலைசெய்கின்ற குருமாருக்குப் போர்த்துக்காலில் "வீதிகளின் குருமார்" என்னும்நாமம் வழங்கி வருகிறது. போர்த்துக்காலுக்குவெளியே பரவத்தொடங்கியிருக்கின்ற இத்தொண்டு "கசாடுகலாற்றோ" என அறியப்படுகிறது. தங்கஇல்லிடமற்று வீதிகளில் அலைந்துதிரிகின்ற பிள்ளைகளை வண. அமெரிக்கோ சுவாமியார் ஒருங்கு சேர்த்து, அவர்களுக்கு இல்லிடம்அளித்து, ஏதோ ஓர்தொழில்முயற்சி பயிற்றிவிடுகின்றார். முன்சொன்ன வண. கலம்பாசுவாமியார் ஒப்போட்ரோ சர்வகலாசாலைப் பட்டதாரியாவர். மின்சாரஎஞ்ஜினீரிங் பட்டபரீட்சையில் சமீபத்திலேயே அரங்கேறியவர்.

## ஆசியர்களை ஆசியர்கள்....

இந்தோசீனவிலே வியெற்னம்நாட்டில் சுமார் 15லட்சம் கத்தோலிக்கர் இருக்கின்றனர். இவர்களில் அரைவாசிக்குமேற்பட்டோர் தற்போது கம்யூனிஸ்த வியெற்மின்ஆட்சிக்குட்பட்டுள்ளனர். அங்கு யுத்தம் நடந்தகாலத்திலும் சந்நியாச, கன்னிகாவாழ்க்கை பிரமிக்கத்தக்கவிதமாக அதிகரித்திருக்கிறது. சமீபத்தில் அங்கு ஒருவாரத்தில்மாத்திரம் 42சந்நியாசிகள் கடைசி வாக்குத்தத்தம் அளித்துள்ளனர். இவர்களில் 30பேரும் ஓர்வியெற்னமியகுரவரான வண. திரூன்டின் சுவாமியாரால் அடியிடப்பெற்ற மத்தியஸ்தநாயகியின் சபையைச் சேர்ந்தவர்கள். விசேஷப்பட்ட திருநாட்களில்மாத்திரம் இவர்கள் சந்நியாசஉடைகள் தரிப்பார்கள். "ஆசியாக்காரரை ஆசியாக்காரரே மனந்திருப்ப வேண்டும்" என்பதையே இவர்கள் தங்கள்விருதுமொழியாகக் கொண்டவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தக மதிப்புரை

சென்றவாரம் நாம்மதிப்புரை அளித்திருந்த

**“தன்னைக் கையளித்தல்”**

என்னும் அருமையான புத்தகம், பிரசுரமும், கிடைக்குமிடமும் வருமாறு:

ST. JOSEPH'S I. S. PRESS,
TRICHINOPOLY—H. O.

அர்ச். சூசையப்பர்
கைத்தொழிற் பாடசாலை அச்சகம்,
திருச்சிறுப்பள்ளி.

சத்தியவேத
**பாதுகாவலன்**

1954-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 2-ந் திகதி

# யாழ்ப்பாண மக்களும் குடியேற்றமும்

யாழ்ப்பாணமக்களின் எதிர்காலசுபீட்சம் முக்கியமாக எதில் தங்கியிருக்கின்றது? முன்போல உத்தியோகத்திலா? மலையாளப் புகையிலைச் செய்கையிலா? மலாய்நாடுசென்று பணமீட்டுவதிலா? இல்லை. பின்னர் எதில் தங்கியிருக்கிறது? இதற்கு யாழ்ப்பாண உதவிஅரசாங்க ஏசன்றர் திரு.நவரத்தினராஜா அவர்கள் யாதுபதில் கூறுகின்றார்? யாழ்ப்பாணமக்கள் யாழ்ப்பாணத்துக்குவெளியே, ஆனையிறவுக்கப்பாற்சென்று குடியேறிக் கமத்தொழில் நடத்துவதிற்தானென்று அவர் பட்டவர்த்தனமாகப்பதில்கூறுகின்றார். வவுனியாவுக்கும் தெற்கில்சென்று நீங்கள் குடியேற வேண்டும்; காணியற்றவர்களுக்குக் கூடியவரை காணியளிக்க அரசாங்கம் உறுதிகொண்டிருக்கின்றது; உங்கள்மத்தியிலுள்ள சமூகஊழியர்களும், பாராளுமன்றப்பிரதிநிதிகளும் உங்கள் குடியேற்றத்தில் சிரத்தையெடுக்க வேண்டுமென்று அவர் கூறுகின்றார். முரசுமோட்டையிலே இவ்வருடம் முன்னூறு காணித்துண்டுகள் பகிர்ந்துகொடுக்கப்படவிருக்கின்றன; அடுத்தவருடம் எழுநூறு காணித்துண்டுகளும் 1956-ம் ஆண்டிலே வவுனிக்குளத்திட்டத்தின்கீழ் எழுநூறு காணித்துண்டுகளும பகிர்ந்து வழங்கப்படவிருக்கின்றன; காணித்துண்டுகளைப் பெற்றவர்கள் உடனேதானே இலாபம் அடைய விரும்பக்கூடாது; அடுத்த இருவருடங்களிலும் ஏற்படுங்கஷ்டங்களை அவர்கள்சமாளித்துக்கொண்டால் அதன்மேல் சுபீட்சமாகவாழலாமென்று அவர்கூறுகின்றார். காணிவேண்டுமென்றஆர்வம் யாழ்ப்பாண மக்களிடையே இன்று அதிகமாக ஏற்பட்டுள்ளது. முரசுமோட்டையில் வழங்கப்படவிருக்கும் முன்னூறுகாணித்துண்டுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணக்குடாநாட்டிலிருந்து இரண்டாயிரம்பேர் மனுப்பண்ணியிருப்பதே இதற்குப்போதியசான்றாகும். ஆனால், காணிபெறுவதுமட்டும் போதாது. நல்ல உழைப்பாளிகளாயிருந்து பெற்றகாணிகளைத் தக்கவாறு கமச்செய்கைக் குள்ளாக்கித் தக்கபலன் பெறவேண்டும். யாழ்ப்பாணமக்கள் சிறந்த உழைப்பாளிகளென்று புகழ்ந்து பாராட்டப் படுகின்றார்கள். பாராளுமன்றத்தின் சபாநாயகரான சேர் அல்பேட் பீரிஸ் அவர்கள் நாத்தாண்டியாவிலே கமக்காரரின் பரிசளிப்புவிழா ஒன்றில் பேசியபோது: “தங்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு அங்குலக் காணியிலும் கமத்தொழில் செய்யும் யாழ்ப்பாணமககளை முன்மாதிரிகையாகக்கொண்டு அவர்களைப்பின் பற்றுங்கள்; யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் இலங்கையின் ஏனையபகுதிகளிலுள்ள மக்களிலும்பார்க்க உழைப்பாளர்களாய்இருக்க அதுவேகாரணம்” எனக் கூறியிருக்கின்றார். நிதிமந்திரியர் திரு. எச். டி. எச். ஜயவர்த்தன அவர்கள் ஹன்வெல்லையில் பேசியபோது: “நான் இப்போதுதான் யாழ்ப்பாணத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறேன்; யாழ்ப்பாணமக்கள் பயிர்ச்செய்கைக்கேற்ற ஒவ்வோர்துண்டுக் காணியையும் பயன்படுத்தியுள்ளார்கள்; மருந்துச்சாலை, தபாற்கந்தோர்முதலாம் வசதிகள் இல்லாது அவர்கள்பெரிதும் கஷ்டமடைகின்றார்கள்; ஆயினும் தங்கள்கமமுயற்சியில் ஊக்கமும், சுறுசுறுப்பும் உடையவர்களாய்இருக்கின்றார்கள்” எனக் கூறியிருக்கின்றார். அதனால் யாழ்ப்பாணமக்கள்நல்லஉழைப்பாளிகள் என்ற தங்கள் பெயரைக்காத்து யாழ்ப்பாணக்குடாநாட்டிலே தங்களுக்குள்ள — தங்களுக்குக் கிடைக்கக் கூடிய காணியை ஒருஅங்குலத் தரைதானும் தப்பவிடாது கமஞ்செய்து—காணியற்றவர்கள் ஆனையிறவுக்கப்பாற்சென்று குடியேறி அங்குகிடைக்கும் காணியைப் பயன்படுத்தித் தக்கவாறு கமஞ்செய்து தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம்உழைப்பாளிகளாய் இல்லாது சோம்பேறிகளாகக் காலங்கழித்தால் என்ன நடக்கும்? வறுமைதலைகாட்டும். அழுக்கு எங்கே இருக்கிறதோ அங்கே ஈக்கள்வந்து மொய்ப்பதுபோல, எங்கே வறுமைதலைகாட்டுகிறதோ அங்கே கம்யூனிஸம்என்ற சமதர்மம் வந்து மொய்த்துக்கொள்ளும். அது வந்தால் கம்யூனிஸ்தநாடுகளில் இன்று நடைபெறுவதுபோல வேலைசெய்யலாம், செய்யாதுவிடலாமென்றசுவாதீனத்திற்கு இடங்கொடாது எல்லோரையும் இடுதண்டம் பிடிதண்டமாக—பலவந்தமாக உழைக்கும்படி செய்து, எல்லோரிடமும் வேலைவாங்கி அன்றாடன்று வயிற்றுக்கு, ஆனல், வயிறாரவல்ல, ஏதோ படி போட்டுக்கொண்டிருக்கும். உழைப்பாளிகளின் நாட்டிலே, பொருளாதார நிலை உயர்ந்தநாட்டிலே பஞ்சமோ, பசியோ இருக்கமாட்டாது. அதனல் சமதர்மமும் தலைகாட்டமாட்டாது. சமாதானமும், சுதந்திரமும் நிலைபெற்றிருக்குமென்க.




## சதாசகாயமாதா கோணம்

### தேவமாதா பிறந்த திருநாள்

(புரட்டாதி மாதம் 8-ந் திகதி)

### நம்பிக்கையின் உதயம்

உலகசரித்திரத்திலே அதிபிரபையுள்ளநாட்களில எங்கள்திருத்தாயாராம் கன்னிமரியம்மாளின் பிறந்ததிருநாளும ஒன்றாகும. குழந்தைமரியாயின் முதலாவதுபிறந்ததினம அன்னம்மாளுக்கும, சுவக்கீனுக்கும வேறுசில கிட்டியஉறவினருக்கும மாத்திரம வெளிப்படையான ஆனந்தத்தை அளித்தது ஆனல், எவரும் அறியாத பான்மையாக, வானதூதர்கள் இவ்வளவுஅலங்காரமான மாதுசிரோன்மணியை உண்டாக்க—உலகத்துக்கீபத்திருவுளங்கொண்டதேவனை ஆனந்தமேலீட்டினல் புகழ்ந்துபோற்றிக் கொண்டாடினார்கள். பின்னர் பதின்மூன்றுவருடங்களுக்குப்பின் அதிதூதர்களில்ஒருவரான கபிரியேல்சம்மனசானவர் அவளைத்தரிசித்து “மங்களம்மரியே! பிரியபிரசாதபூரணியே!” என்றுவாழ்த்துக்கூற அனுப்பப்பட்டார். அவவுடைய பிறந்ததிருநாள் முன்ஒருபோதும் அறியாத, அனுபவியாத சந்தோஷத்தைக் கொடுத்ததென்பதை உலகம் காலகதியில் உணர்ந்துகொண்டது.

திவ்வியமீட்பரின் தாயாக அவதரிக்கவேண்டிய கன்னிகையின்பிறப்பைப பல்லாயிரம்வருடங்களாக யூதர்ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். சாத்தானோடும, பாவத்தோடும்போராட அவர்கள் வல்லமையற்றவர்களாக இருந்தார்கள். அந்த நாளும வந்தது. குழந்தைவளர்ந்தது. கன்னிகை கிறிஸ்துஎன்னும் இரட்சகரை எங்களுக்குத்தந்தா. இதைவிடப் பெரிய, அளவில்லாத, விலைமதிக்கரிய கொடை இல்லை. அந்நாட்தொட்டு இந்நாள்மட்டும மனுக்குலத்தின்மேல் தமதுதெரியலான கொடைகளை, உதவிசகாயங்களைப் பொழிந்தவண்ணம் இருக்கிறு; அவ எங்கள்தாய். தாய்க்குரியஅன்போடு, தயாளத்தோடு தேவகொடைகள்நிறைந்த பொக்ஷசாலையிலிருந்து எங்களதேவைகட்குத் தக்கவாறு உதவிசகாயங்களைப் பகிர்ந்துகொடுக்கும் வேலையிற் கரிசனையாயிருக்கிறு.

ஆனல், மனிதர் இந்தநல்லதாயை மறந்தவர்கள்போலச் சீவிக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை இழந்தவர்கள் போலக் காணப்படுகிறார்கள். தங்கள் துன்பதுரிதங்களில் ஆறுதல்கிடையாதோஎன அங்கலாய்க்கிறார்கள். சர்வதேசிய, தேசிய, குடும்ப, கஸ்திதுன்பங்கள் மனுச்சந்ததியை உபாதிக்கின்றன. பஞ்சம், படை, கொள்ளைநோய், குரோதம், பாவம்முதலிய பல்வகைத் தீமைகளைக்கண்டு மனிதன் அவநம்பிக்கைக்காளாகிறுன். சஞ்சலப்படுகிறுன். உதவியின்றி ஏங்குகிறுன். உதவி எப்போதுகிடைக்கும்? ஆரிடமிருந்து கிடைக்கும்?

மரியாயிடமிருந்தே. மனிதர் தேவதாய்ப்பக்கமாக அவவுடைய திருக்குமாரன்பக்கமாகத் திரும்பும்போதே, நாம் உபத்திரவப்படுவதைக்காண அவசகிக்கமாட்டா. நமக்குத்தேவையான உதவியைத் தேவசுதனிடமிருந்து பெற்றுத்தருவா. அவவுடைய பிறந்ததிருநாளானது, அவ எங்களுக்கு உதவிசெய்யஆவலாயிருக்கிறு, வல்லமையுள்ளவவாயிருக்கிறுஎன்ற உண்மையை ஞாபகப்படுத்தவேண்டும்.

அவவுடைய பிறந்ததிருநாளில் சோபனவாழ்த்துகள் கூறுவோம். “மங்களம்மரியே, பிரியபிரசாதபூரணியே!” என்று திரும்பத்திரும்ப வாழ்த்துவோம்! அவவுடைய புண்ணியசீவியத்தைப் பின்பற்றிநடக்கநமக்குத்தேவையான வரப்பிரசாதங்களைக் கேட்டுஅடைவோம், எங்கள்சீவமே! எங்கள்மதுரமே! எங்கள் தஞ்சமே வாழ்க! என்று எப்போதும் ஏற்றிப் போற்றுவோம்! மரியாயின்பிள்ளை ஒருபோதும் நித்தியமாய்க் கெட்டுப்போகாதென்றவாக்கை மனத்தில் இருத்தி, அவளின் உண்மையான பிள்ளையாய்ச் சீவித்துவர நம்மாலானமட்டும பிரயாசப்படுவோமாக. மரியாயே வாழ்க!

## சுதேச வர்த்தமானம்

### நெசவுதொழிற் சாலைகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே அரசாங்கம மூன்றுநெசவுதொழிற் சாலைகளை அமைக்கத் திட்டஞ்செய்திருக்கின்றது. இவைகள்முறையே சேணியதெருவிலும, சாவகச்சேரியிலும், மாதகற்பகுதியிலும் அமைக்கப்படவிருக்கின்றன. இத்தொழிற்சாலைகள் பலரை வேலைகொள்ள முடியும். இவற்றின் அருகாமையிலுள்ள சிறிய நெசவுதொழிற்சாலைகளில் பயிற்சிபெற்றவர்களுக்கு அவற்றில் வேலைகிடைக்கும. இந்த மூன்று பெரிய தொழிற்சாலைகளும் நன்குநடைபெற்றல் வெள்ளவத்தை நெசவுதொழிற் சாலையைப்போல இவைகளும் பெரிய தொழிற்சாலைகளாக ஆக்கப்படும்.

### வலிகாமம்கிழக்கின் அவசியதேவைகள்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் இம்மாதஇறுதியிலே யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யும்போது, வலிகாமம்கிழக்குப்பகுதியின் அத்தியாவசியதேவைகள் அவருக்குச் சமர்ப்பிக்கப்படும் உபசாரப்பத்திரத்தில் எடுத்துக்காட்டப்படவிருக்கின்றன. அவையாவன: பழைய டச்சுத்தெருவைத் திருத்திஅமைத்து, அதுமோட்டார்தப் போக்குவரத்துக்கு ஏற்றதாகச் செய்யப்படவேண்டும்; யாழ்ப்பாணத்தின் தென்பகுதிக் கடலேரித்திட்டம் விரைவில் நடத்திமுடிக்கப் படவேண்டும்; காணியில்லாத கமத்தொழிலாளருக்கு முடிக்குரியகாணிகள் வழங்கப்பட்டு, அவற்றிற்கு நவக்கிரி, நிலாவரைக் கிணற்றிலிருந்து நீர்ப்பாய்ச்சும் வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்பனவே.

### தேனீவளர்ப்புப் பிரசாரம்

மன்னார்ப்பிரிவில் தேனீ வளர்ப்பு இயக்கத்தைப் பரப்புமுகமாகப் பிரபல தேனீவளர்ப்பு நிபுணரான திரு. வி. முத்துஎன்பவர் அங்குபல்வேறுபகுதிகளுக்குஞ்சென்று தேனீவளர்ப்புப்பற்றியும், அதனல்மக்கள் அடையக்கூடிய நயங்கள்பற்றியும் பிரசாரஞ்செய்துவருவதுடன் செயலளவிலும் தேனீவளர்ப்புமுறையைச் செய்துகாட்டிவருகின்றார். அடம்பன், முசலிபோன்ற பகுதிகள் தேனீவளர்ப்புக்கு மிகவாய்ப்பானவையாயிருப்பதால்அப்பகுதிகளில் தேனீவளர்ப்பதை ஓர்குடிசைக்கைத்தொழிலாக நடத்திவரச் சனங்கள் ஊக்கப்படுத்திவிடப் படுவார்களெனத் தெரியவருகிறது.

### மன்னாரும் சிறுபோகமும்

கட்டுக்கரைக்குளத்தில் ஏராளமான தண்ணீர் இருந்தமையாலே மன்னார்ப் பகுதியிலே இம்முறை சிறுபோக நெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை மிகப்பலிதமுடையதாகுமென் எதிர்பார்க்கப்படுகிறது. அறுவடை இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. அங்குள்ள கூட்டுறவு விளைபொருள் உற்பத்திவிற்பனவுச் சங்கங்கள் உத்தரவாதவிலைப்படி விளைந்த நெல்லை விலைகொடுத்து வாங்குவதற்கான ஆயத்தங்கள் செய்துவருகின்றன.

## பொலிஸ்காரரின் தியாகம்

கட்டுகொடையைச்சேர்ந்த ஐப்பின்கோனு எனும்பெண் அவிசாவலைஆஸ்பத்திரியில் அபாயகரமான நிலைமையில் இருந்தாள். அவளதுஉயிரைக்காத்துவைக்கும்படி, பிறருடைய சரீரத்திலிருந்து இரத்தமெடுத்து அவளில் செலுத்தவேண்டியிருந்தது. வைத்தியஅதிகாரிகள் அதற்கென்று இரத்தோபகாரிகளை வேண்டினார்கள். ஆனால், எவரும் முன்வரவில்லை. பின்னர் அவிசாவலைப்பொலிசருக்கு மனுப்பண்ணவே, அவர்களில் ஒருவரான திரு. டபிள்யு. எஸ். பெரேறாஎன்பவர் விரைந்துசென்று இரத்ததானஞ்செய்து அவள்சீவனைக்காத்துவைத்தார்

## சங்குஏற்றுமதித் தீர்வை

மிகவும்கூடிய ஏற்றுமதித்தீர்வை விதிக்கப்பட்டகாரணமாக இலங்கையிலிருந்து பிறநாடுகளுக்குச் சங்குஏற்றுமதிவெகுவாகக் குறைந்துகொண்டுவருகிறது. அதனால் சங்கின் ஏற்றுமதித் தீர்வையை 250 ரூபாவிலிருந்து 75 ரூபாவாகக்குறைக்க அரசாங்கம் சென்ற வியாழக்கிழமை தீர்மானித்திருக்கிறது. தற்போது ஆயிரம்சங்குகளுக்கு 250 ரூபாதீர்வை அறவிடப்படுகிறது. தீர்வையைக் குறைப்பதுடன் பெருந்தொகையான சங்குகளைக் கிழக்குப் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதிசெய்வதற்கான வழிவகைகளையும் அரசாங்கம் தேடவிருக்கிறது. தற்சமயம் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சங்கு ஏற்றுமதிசெய்யப் படுவதில்லை.

---

# பிரதமரின்தாயார் காலஞ்சென்றார்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்களின் தாயாரான ஸ்ரீமதி அலிஸ் கொத்தலாவலஅவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை இரவு கொழும்பிலே ஹோட்டன் பிளேஸிலுள்ள தமதுஇல்லத்தில் காலஞ்செல்லலாயினர். இவர் 1878-ம் ஆண்டு பிறந்தாராகலின் மரிக்கும்போது இவருக்குவயது 78. இவர் காலஞ்சென்ற முதலியார் டி. சி. ஜி. அற்றிக்கலை அவர்களின் சிரேஷ்டபுதல்வியாவர். பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்களும், செனற்றர் ஜஸ்ரின் கொத்தலாவல அவர்களும், ஸ்ரீமதி சித்தார்த்த கொறியா அவர்களும் இவரின்புத்திரர், புத்திரியாவர். இவர் ஆற்றிவந்த தேசதொண்டுகள், சமூகதொண்டுகள் காரணமாக எம். பி. ஈ., சி. பி. ஈ எனும் மகிமைப் பட்டங்கள் சன்மானிக்கப் பெற்றிருந்தார். தமது பிள்ளைகள் பௌத்தசமயிகளாய்இருந்தபோதிலும், இவர் என்றைக்குமே ஓர் அங்கிளிக்கன்சபைக் கிறீஸ்தவசீமாட்டியாயிருந்து தமதுசபைக்கும் அருந்தொண்டுகள்ஆற்றியிருக்கின்றார். பொறளையிலுள்ள சகல ஆர்ச்சியசிட்டர்கள்கோவிலிலே புதன்கிழமைதோறும் நடைபெற்றுவரும் சதாசகாயமாதா நவநாள்பக்திமுயற்சிக்கும் இவர் சமூகமளித்திருக்கிறார். இவரின் பிரேததகனவைபவம் அங்கிளிக்கன்சபை முறைப்படி நடந்தேறியது.

---

### நன்றியறிந்த தோத்திரம்

நான் இரண்டு வருடகாலமாகத் தலைநோயால் கஷ்டப்பட்டேன். சதாசகாயமாதாவின் புதுமைகளைக் கேள்விப்பட்டு அவவிடம் இரந்து மன்றாடினேன். அவவின் அருளால் சுகம்பெற்றேன். நேர்த்திப்படிப் பிரசுரிக்கிறேன்.

ஏ. எம்.

# ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

ஐப்பசிமாதத்தில் மடுத்திருப்பதியில் நடைபெறும் ஆசிரியர்களின் வருடாந்தஞானஒடுக்கம் இவ்வருடம்நடைபெறாது.

இம்மாதம் 18, 19, 20-ந்திகதிகள் பாடசாலை ஆண்பிள்ளைகளின் மடுத்திருயாத்திரைத்தினங்கள். இவை ஆசிரியர்களுக்கும் தியான தினங்களாகும்.

இத்திருயாத்திரையிலும், தியான தினங்களிலும் தத்தம் பாடசாலைப் பிள்ளைகளுடனாவது, தனித்தாவது பங்குபற்றிக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இத்திருயாத்திரை—தியானமுயற்சியில் பங்குபற்றுபவர்கள் யாவரும் தங்கள் பெயர்களை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 2-9-54.

---

# இலங்கை நாயகிக்கு எழிலுறு வரவேற்பு

தேவதாயாரின் மோட்சாரோபணத்திருநாளாகிய ஆவணி 15-ம நாள் மாலை 4 மணிக்கு இலங்கைஇராக்கினியின் திருச்சுரூபம் நீர்கொழும்புதூர்ச். அற்புத மரியநாயகியின் ஆலயத்தினின்று கடற்கரைத்தெருஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படலாயிற்று. செபமாலை ஓதிநின்ற சனக்குழாமின் மத்தியிலே, ஞானக்கீர்த்தனைகள் இசைத்து அணிவகுத்துச்சென்ற பள்ளிச்சிறுமைத் தொடர்ந்து நாலாபக்கமும் ஆசிநல்கிச்சென்ற திருநாயகி ஆலயத்தில் மகுடஉருவமாய் அமைக்கப்பெற்றிருந்த அழகியமேடையில் ஒருவாரமாகவீற்றிருந்து வரப்பிரசாதமாரி பொழிந்து பரலோகபாதையை மக்கட்குப் பகரலாயினர்.

"மாதாவே வாரும், மகுடஞ்சூட்டுவோம்" என்ற மகுடவசனந்தாங்கிய மகத்தான பிரசங்கம்ஒன்றைச் சின்னச்சுவாமியார்செய்து, மக்களின்மனதில் மங்காத மாதாபக்தியைப் பதியச்செய்தனர். அதைத்தொடர்ந்து கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் குரேஆண்டவர்அவர்களும் சிங்களத்தில் சிறப்பான பிரசங்கமொன்று செய்து வரவேற்புவைபவச்சிறப்பை மேலும்அழகுபடுத்தினார்.

இலங்கைநாயகி இவண்எழுந்தருளியிருந்தமூவிருதினங்களிலும் தேனினுமினியதமிழில் வண. சற். என். குரூஸ் சுவாமியவர்கள் ஞானஒடுக்கபோதகஞ் செய்து, விசுவாசிகளின் அயர்வுற்ற இதயங்களை அருட்டிஎழுப்பினர். அதனால் பன்னாட்களாகக் கோவில்முகங் காணாதிருந்த பலர் பாவசங்கீர்த்தனஞ் செய்தார்கள். இரவென்றும், பகலென்றும்பாராது இடையறாது செபமாலையை மணித்தியாலக்கணக்காகச் செபித்துத் திரளானநன்மைகளைத் தேவஅன்னையிடம் வேண்டிநின்றார்கள் நம்மூர் மக்கள்.

தழுப்பத்தை, பெரியமுல்லை, எத்துக்கால்வாசிகளும் திருச்சுரூபத்தைத் தத்தம்ஆலயங்களிலும் அலங்காரமாக வரவேற்றுச் செபமாலையாம்செயமாலை சூட்டி மாதாவின்மக்களாய் வாழ மனமார வாக்களித்தார்கள். நாலிரு தினங்களாக நம்மிடையேதங்கிப் பரலோகபிரசாதங்கள்சொரிந்த இலங்கை இராக்கினி இரவிவாரம் 22-ந் திகதி திவ்வியபூசையின்பின் தேவத்தையை நோக்கி எழுந்தருளலாயினர்.

ஜே. ஃபிரனிஸ் லாவுஸ் குரேறு

---

● நல்லதண்ணீரில் நன்றாக நனைந்து ஊறின மரம் உளுத்துப் போகாமல் நெடுநாட்களாக இருக்கும், உப்புத்தண்ணீரில் உள்ள சிலபூச்சிகள் மரத்தை இலகுவாய் அரித்து விடுகின்றனவென்று மரஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

## அறிவுச் சுடர்

1. ஒட்டகம் ஒன்றுக்கு அமைக்கப்பட்டுள்ள சமாதி எங்கே இருக்கிறது?

இந்தியாவிலே சிவ்பா எனுமிடத்தில் இருக்கின்றது. 'மெனு' எனப்பெயரிய இந்தஒட்டகத்தின் சவக்குழிக்கு மேலாக அந்தப்பெரிய சமாதிக்கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. தருமத்துக்கென்று தானியம்சேகரிக்கும்படியாய் யாசகபாத்திரம்ஒன்றை இந்த ஒட்டகம் நாள்தோறும் வீட்டுவாயில்கள்தோறும் கொண்டுசென்று வரலாயிற்று.

2. சனத்தொகை சம்பந்தமாய்க் கம்யூனிஸம் மிகப்பெரிய வெற்றியை எப்போது அடைந்துகொண்டது?

45கோடி மக்களுடன் சீனதேசம் மாலோ-ரிசி-ரங்எனும் கம்யூனிஸ்த சீனத்தலைவனால் அடிப்படுத்தப்பட்டபோதுதான்.

3. பிரமாணத்தையும், நிறையையும் ஒப்புநோக்குமிடத்து உலகில அதிகம்விலையேறப்பெற்றதாய்க் கண்டறியப்பட்டிருப்பதுயாது?

1856-ம் ஆண்டு பிரித்தானிய கயனவினால் பாவனைக்குவிடுக்கப்பட்ட ஒரேயொருசதம்பெறுமதியான ஓர்தபால் முத்திரையேயாகும். இன்று அதனை ஒருலட்சம்டலருக்குக் குறைந்தவிலையில்—அதாவது அதன்உண்மையான விலையில் பத்துலட்சம் மடங்குக்குக் குறைந்தவிலையில் வாங்கமுடியாதிருக்கிறது.

4. கடல்நீரில் தங்கம்இருக்கிறதா?

ஆம், ஒவ்வொருதொன் கடல்நீருக்கும் ஏறக்குறைய ஐந்துசதம்பெறுமதியான தங்கம்இருக்கின்றது.

5. சோவியற்ருஷியாவிலே தொழிலாளிஒருவன் தனக்குக் குறிக்கப்பட்ட எந்தத்தொழிலையும் அதுஎங்கே செய்யப்படவேண்டியிருந்தாலும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது உண்மைதானா?

ஆம், சொன்னதொழிலைச் சொன்னவிடத்திற்போய் அவன்செய்யவேண்டியதுதான்.

---

# நான்காம்ஆண்டு நிறைவுவிழா

சில்லாலைவடக்கு நல்லாயன் சனசமூகநிலையத்தின் நான்காவதுஆண்டு நிறைவுவிழா சென்ற 16-8-54 திங்கட்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை பண்டத்தெருப்புக் கோவில்பற்றுப் பொதுசன சுகாதார பரிசோதகர் திரு. ரி. துரைசிங்கம் அவர்கள் வீடுகள்தோறுஞ் சென்று வீடுகளின் சுகாதாரமுறைகளைக் கவனித்தார். பின்னர் சில்லாலைவடக்கு ஐக்கியநாணயசங்கக் கமங்களுக்குச் சென்று காய் கறித்தோட்டங்களைப் பார்வையிட்டார். பிற்பகல் நல்லாயன் இளைஞர்சங்க விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. 5மணிக்கு விழாப் பகிரங்ககூட்டம் நிலையத்தலைவர் திரு. ம. யோசெவ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசியின் அறிக்கையைத் திரு. தா. அந்தோனிப்பிள்ளை அவர்கள் படித்தபின் யாழ்ப்பாணப்பகுதிச் சனசமூக நிலையங்களின் சமாசகாரியதரிசி முகாந்திரம் இ.பொ. இராசையா, யாழ்ப்பாணப்பகுதிக் கிராமச்சங்க மகாநாட்டு அக்கிராசனர் முகாந்திரம் வ. மகேசன், சமூகத்தொண்டன் ஆசிரியர் திரு. க. பே. முத்தையா, வழக்கறிஞர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரித் தமிழ்ச்சங்கதலைவர் திரு. வ. இ. தனராசா ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். சுகாதாரம், கிருஷிகம், விளையாட்டு ஆ... போட்டிகளில் வெற்றிபெற்றவர்கட்குப் பண்டத்தெருப்புக் கிராமச்சங்கத்தலைவர் திரு. ச. நாகமுத்து அவர்கள் பரிசில்கள் வழங்கினர். இறுதியில் காரியதரிசி திரு. ம. ஞானப்பிரகாசம் அவர்கள் நன்றியுரைகூறியதும் விழா நிறைவாயிற்று.

— நிருபர்

---

# கப்பலேந்திமாதா திருநாள்

வன்னிப்பகுதியில் அடங்கிய கேரியகுளத்தே கோவில்கொண்டிருக்கும் அர்ச் கப்பலேந்திமாதாவின் திருநாளை மரியாயின்வருடமாகிய இப்புனிதவருடத்திலே பலவருடங்களுக்குப்பின் திரும்பக்கொண்டாட மாதாசித்தமாயினார். திருநாளுக்குமுந்திய திரிதின விழாக்கள் சென்ற 26-8-54 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. கடைசிவிழாத் தினமாகிய 28-ந் திகதி சனிவாரம வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்களால் வேஸ்பர் பாடப்பட்டது. திருநாளாகிய மறுநாட்காலை பாடற்பூசை நிறைவேறியது. அவ்வமயம் கிறீஸ்தவர்கள் மாத்திரமல்ல, அநேகபிறசமய சகோதரரும் சமூகங்கொடுத்தமை ஈண்டுகுறிப்பிடத்தக்கது. பூசைமுடிந்ததும் மாமரியன்னை அழகுறச்சிங்காரித்த கேடயத்தே எழுந்தருள, அலங்கரிக்கப்பட்டவீதியூடே சுற்றுப்பிரகாரம் பத்திச்சிறப்பாகநடந்து திருநாள் இனிது முடிவெய்தியது.

— வன்னிநிருபர்

---

# திருமண உற்சவம்

மிருசுவில்வாசரும், நல்லூர், வண. சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்களின் கீழ் 31 வருடகாலம் ஆசிரியத்தொண்டாற்றியிருந்தவருமான திரு. எஸ். ஜே. ஞானப்பிரகாசம் அவர்களின் சிரேஷ்டபுதல்வரும், சிலாவத்துறைக் கத்தோலிக்கபாடசாலை ஆசிரியை திருமதி எம். ஆர். நிக்கலஸ், பண்டைத்தரிப்பைச்சேர்ந்த பாத்திமாகிரிக் கன்னிகாமடத்துஆசிரியை சங் சிஸ்றர் மேரிசென்போல், கொழும்பிலே சுகாதாரபகுதியில் லிகிதராயிருக்கும் திரு. ஜி. என். ஸ்ரனிஸ்லாஸ்என்பவர்களின் சகோதரருமான திருவளர்செல்வன் மரிய ராசரட்ணத்துக்கும், மிருசுவிலிலே பலராலும்நன்கறியப் பெற்றவரான திரு. சூசைப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை அவர்களின் புதல்வியும், கொடிகாமம் கிராமத்தலைமைஉத்தியோகஸ்தர் திரு. பி. ஜே. இராசாஎன்பவரின் பெருமகளுமான திருவளர்செல்வி ரோசம்மாவுக்கும் சென்றஆவணித்திங்கள் 23-ந்திகதியன்றுகாலை மிருசுவில் அர்ச். நிக்கலாஸ்ஆலயத்தில் வண. ஸ்பம்பதிசுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேறியது. திவ்வியபூசையின்பின் புதியதம்பதிகள் பிரதிமைப்படம் பிடிக்கப்பெற்று பி. எஸ். நிக்கலாஸ் தம்பதிகளாலும், ஏ. டி. பொன்னுக்கோன் தம்பதிகளாலும், எஸ். லூயிஸ் தம்பதிகளாலும் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று வாத்தியவரிசைகளுடன் வீதியுலாப்போந்து, மணமகள் இல்லஞ்சேர்ந்து இனிதேவரவேற்று உபசரிக்கப்பெற்றனர். இப்புதியகுடும்பமானது அஷ்டஐஸ்வரியங்களும்பெற்று வாழ அமலன் திருவருள் பாலிப்பாராக!

—நிருபர்

---

## புரட்டாசி மாதம்

போதுக்கருத்து:— கத்தோலிக்க சேவையிலே வாலிபர்கள் எண்ணிக்கையிலும், ஞானத்திலும் முன்னேறும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— திருச்சபையின் சமூகதர்மக் கொள்கை வேதபோதகநாடுகளில் அதிகமாகப் பரவி நன்கு மதிக்கப்படுவதற்காக மன்றாடிக் கொள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

அடுத்த 8-ந் திகதி புதன்கிழமை யார் பிறந்த தினம் என்று தெரியுமா? எங்கள் தாயார் பிறந்த தினம். இது உங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தரும்.

ஒரு வீட்டிற்குள், அல்லது மாளிகைக்குள், அல்லது கோட்டைக்குள் போக வேண்டுமானால் வாசல் வழியாகவே போகலாம். வாசலை அடைந்து விட்டால் வீட்டை, அல்லது மாளிகையை, அல்லது கோட்டையை அடைந்ததற்குச் சரி.

மோட்ச வீட்டுக்கு வாசல் எது என்று தெரியுமா? எமது தாய் கன்னி மரியம்மாள் தான். அவ "பரலோகத்தினுடைய வாசல்." சன்னி மரியாளின் வழியாய் எமக்குத் தேவ வரப்பிரசாதம் கிடைக்கும். சருவேசுரனுடைய தாயார் தாமே எங்களுக்குத் துணைபுரிய வேண்டும். தாய்க்கு ஏற்ற சேய்களாகச் சீவித்து, அவவைப் பின்பற்றி நடந்தால் நாம் யேசுநாதரைப் போலாகிப் பரலோகத்தை அடைவோம்.

எங்கள் பரலோக அன்னை பிறந்த தினத்தைக் கொண்டாடும்பொழுது எம்மை இவ்வுலகில் பெற்று வளர்க்கும் அன்னையையும் நினைக்க வேண்டும். இந்த அன்னை எமக்காக எவ்வளவாகத் தன்னைப் பரித்தியாகஞ் செய்கிறு. அவவுக்கு எப்போதும் எங்கள்மேற் கவலை. எமது துன்பம் அவவுக்குத் துயரம். எமது சந்தோஷம் அவவுககு ஆனந்தம். எமது முன்னேற்றம் அவவுடைய ஆவல்.

இப்படியான தாயை நாம் இத்தினத்தில் சங்கிக்க வேண்டும். மற்ற நாட்களிலும் பார்க்க இத்தினத்தில அவவுக்கு ஆறுதல் சொல்லி, அவவை அகமகிழச் செய்ய வேண்டும்.

ஆகையால், நீங்கள் இத்தினத்தைத் தாயார் தினமாக அனுசரியுங்கள். எல்லோரும் திவ்விய பூசை கண்டு, நன்மை உட்கொண்டு, அம்மாவின் கருத்துக்காக ஒப்புக் கொடுங்கள். உங்கள் பாடசாலை அறிக்கையை அவவுக்குக் காட்டுங்கள். நீங்கள் கற்றிருக்கும் ஆடல் பாடல்களை அவவுக்குக் காட்டுங்கள். அவவை நீங்கள் நேசித்துச் சங்கித்து நடப்பதாக அவவுக்கு வாக்குப் பண்ணுங்கள். எல்லோரும் தாயார் தினத்தைச் சந்தோஷமாய்க் கொண்டாடுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணு

## பாவியெனப்பிறந்தேன்

'ஜெயம்'

1

சூரியனாய் இருந்தால்—தாயார்
சுந்தர ஆடைசெய்து
போர்வை தரித்திடுவாள்—அந்தப்
புண்ணியம் செய்யவில்லை

2

சந்திரனாய் மலர்ந்தால்—தாயார்
சந்ததம் தன்பதத்தில்
எந்தனை வைத்திடுவாள்—அந்த
இன்பமும் இல்லையந்தோ!

3

தாரகை யாய்விடினும்—தாயார்
தங்க முடிமிசையே
சேரக் கிடைத்திருக்கும்—அந்தச்
செல்வமுந கிட்டவில்லை

4

பாவியெனப் பிறந்தேன்—பூவில்
பாக்கியம் அற்றவன்நான
தாவி அணைத்திடுவாய்—தாயே
தஞ்ச மெனக்கினியார்?

## தெரியுமா?

1. மாமிசபட்சண மிருகங்கள் தண்ணீரை நக்கிக் குடிக்கின்றன; தாவரபட்சண மிருகங்கள் அதை உறிஞ்சிக் குடிக்கின்றன.
2. அமெரிக்க ஐக்கியதேச பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் அமெரிக்க தேசத்தவராய் இருக்கத் தேவையில்லை.
3. ஆஸ்திரேலியாவின் தலைநகரம் கன்பெரு.
4. அமெரிக்க ஜனுதிபதியாய் இருந்த கேபட் கூபரின் தகப்பன் ஓர் கொல்லன்.
5. ஜப்பானிலே அணுக்குண்டு முதன் முதலாக வீசப்பட்டது கிரூஷிமாவில்.
6. செம்பு ஆதியில் சைப்பிறஸ் தீவில் கண்டெடுக்கப் பட்டது.
7. ஆதியாகமம் பழைய ஏற்பாட்டில் உள்ள முதற் புத்தகம்.
8. சம்பேதுரு அப்போஸ்தலர் வத்திக்கான் குன்றிலும், சம்பாவிலு ஒஸ்திய வீதியிலும் வேத சாட்சிகளாகக் கொல்லப்பட்டார்கள்.
9. ரங்ஸ்ரன் என்பது ஓர் உலோகம்.
10. வின்ஸ்றன் சேர்ச்சில் ஓர் பிரபு (Sir)

J. M. J.

## கணிதப்பகுதி

1. ஒரு மரத்திற் சில சிட்டுக்குருவிகள்இருந்தன. மறுமரத்தில் இருந்த புறுவானது அவற்றை நோக்கி: உங்களில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? என வினவியது. அதைக் கேட்டுக் கூட்டத்திலிருந்த கிழச் சிட்டு கூறியதாவது: என் பரிவாரமும், அதன் அளவும், அதிற்பாதியும், பாதியிற் பாதியும், நானும் சேர்ந்து 100 பேர் இருக்கிறோம் என்றது. ஆகவே, கிழச் சிட்டின் பரிவாரத்தி லிருந்த சிட்டுக்கள் எத்தனை?

2. பலகார வட்டியலில் 60 ஈக்கள் மொய்த்திருக்க, அதில் இருபதைத் தூத்திவிட்டால் மீதியெத்தனை?

J: ஸ்ரனிஸ் லாவுஸ் குரேரு,
த. க. பாடசாலை,
குடாப்பாடு, நீர்கொழும்பு

* * *

3. ஒருவங்கி மனேஜர் ஒருவனை வேலைக்கு அமர்த்திச் சம்பளத்தை அவனே பேசிக் கொள்ளும்படி விட்டார். அவன் 1-ம் நாள் 1 சதமும், 2-ம் நாள் 2 சதமும், 3-ம் நாள் 4 சதமும், இப்படியாக ஒவ்வொருநாளும் முதலநாளிலும் இருமடங்கு சதம்தரவேண்டுமெனக் கேட்டான். இந்தச் சதக்கணக்கைக் கேட்டதே மனேஜர் அவ்வாறு கொடுக்கச் சம்மதித்தார். அவன் இந்தமாதம என்னசம்பளம் பெறுவான்?

4. ஒரு தோட்டக்காரன் தனது கூலியாட்களுக்குச் சம்பளம் பேசும்போது, "தோட்டத்தில் பறித்துவரும் பழங்களில் அரைவாசியை உங்கள் ஒவ்வொருவருக்கும் தருவேன்; அதில் வரியாக நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு ஒருபழம் தரவேண்டும்" என்றான். அதற்கு எல்லாரும் உடன்பட்டனர். தோட்டக்காரன் தோட்டத்துள் சென்று ஒருதொகையான பழங்களைப் பறித்து வந்தான். அவர்களை ஒவ்வொருவராய் அழைத்து அவர்களிடம் அரைவாசியைக் கொடுத்து வரியாக ஒவ்வொருபழத்தைப் பெற்றான். பிறகு பழங்களை எண்ணிப் பார்த்தபோது தான்பறித்த எல்லாப் பழங்களும் தன்னிடம் இருக்கக்கண்டான். அவன் எவ்வளவு பழங்கள் பறித்தான்?

இ. மே. யோசெவ் தங்கராசா,
யாழ்ப்பாணம்.

* * *

5. ஒரு குடும்பத்தில் இரண்டு சகோதரிகள். ஒவ்வொரு சகோதரிக்கும் இவ்விரண்டு சகோதரர்கள். குடும்பத்தில் உள்ள சகோதர, சகோதரிகள் எத்தனை?

பிலிப் மிக்கேல்,
புங்குடுதீவு.

## கண்டுபிடியுங்கள்

ஆறு எழுத்துக்களைக் கொண்ட தேவ அன்னையின் பெயர்.

1-ம் எழுத்து — செபத்தில் உண்டு, தபத்தில் இல்லை.
2-ம் எழுத்து — பதிலில் உண்டு, மதிலில் இல்லை.
3-ம் எழுத்து — மாவில் உண்டு, காவில் இல்லை.
4-ம் எழுத்து — பாலையில் உண்டு, பானையில் இல்லை.
5-ம் எழுத்து — மாலையில் உண்டு, காலையில் இல்லை.
6-ம் எழுத்து — தாயில் உண்டு, தந்தையில் இல்லை.

விடை :— பரிபாலனமாதா

சே. பேர்னுண்டோ
சஞ்சூஸையப்பர் சாதனைகழகம்
கொழும்புத்துறை.

## சிறுவரை நேசித்தவர்

யோசெவ் கலஸாந்தியுஸ் அரகோனியாவில் பிறந்தவர். சிறு வயதில் சிறு பிள்ளைகளுடன் கூடி விளையாடி அவர்களுக்கு வேத சத்தியங்களைப் படிப்பிப்பார்.

அவர் பலகலைக்களைக் கற்றார். வேத சாஸ்திரமும் படித்துக் குருவானார். ரோமையில செபமும், தபமுமாய்ச் சீவித்தார். அங்கு கொள்ளைநோய் பரவியபோது அர்ச். கமில்லஸ் உடன் நோயாளரைப் பராமரித்தார். வாலிபரை வழிநடத்துவதே அவரது சீவிய இலக்கென்று தெய்வாதீனமாக அறிந்து, மாதாபோரால் சிறுவரைப் படிப்பிக்கும் குருமார் சபையை அடியிட்டார். சபைக்குத் தலைவராயிருந்தாலும் சிறுவரைப் படிப்பித்தும், நல்வழிநடத்தியும் வந்தார். அவர் பட்ட அரும் பிரயாசைகளையும், துன்பங்களையுங் கண்டவர்கள் அவரை யோபு என்று அழைப்பார்கள். அவர் புதுமைகள் பல புரிந்தார். பிறர் மனதுகளை அறிய வரம் பெற்றார். ஒருமுறை தேவமாதாவும், குழந்தையேசுவும் அவருடன் சம்பாஷிக்கும் வரத்தையும் பெற்றார். இவர் திருநாள் ஆவணிமாதம் 27-ந் திகதியாகும்.

M. J. M.

## நன்றி கெட்டவர்கள்

யேசு சமாரியா வூடாகப் போக நேர்ந்தது. வழியில் பத்துக் குஷ்டரோகிகள். அவர்கள் தூரத்தில் நின்று யேசுவைக் கூவியழைத்து, தங்கள் மேல் இரங்கித் தங்களின் வருத்தத்தைக் குணமாக்கும்படி அவரைக் கேட்டார்கள்.

"நீங்கள் போய் உங்களைக் குருக்களுக்குக் காட்டுங்கள்" என்று யேசு அவர்களுக்குச் சொன்னார்.

அவர்கள் போகும் வழியில் ரோகம் குணமாயிற்று. அவர்களில் ஒருவன் உடனே திரும்பிவந்து ஆண்டவருக்கு நன்றி சொன்னான். அவன் சமாரித்தன். "பத்துப்பேர் குணமானார்கள் அல்லோ! மற்ற ஒன்பது பேரும் எங்கே? நன்றியுள்ளவன் சமாரித்தன் மாத்திரந்தானு?" என்று யேசு கேட்டார்.

(ஞாயிறு சுவிசேஷ [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயலான் யார்?

'நீங்கள் காண்பவைகளையும், கேட்பவைகளையும் காணவும், கேட்கவும் அநேகர் ஆசைப்பட்டார்கள். அந்தப் பாக்கியம் உங்களுக்கே உரியது" என்றார் யேசு.

வேத அறிவுள்ள ஒருவன் யேசுவிடம் போய், "எல்லாவற்றிலும் பெரிய கட்டளை எது?" என்று அவரைக்கேட்டான்.

"வேததத்தில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது?"

"உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு மனதோடும், உன் தைரியம் எல்லாங் கொண்டும் நேசிப்பாயாக; உன்னைப் போல் உன் அயலானையும் நேசிப்பாயாக."

"சரியான மறுமொழி. இதைச் செய்தால நித்தியசீவியம் அடைவாய்."

அந்த அறிவாளி தன்னை உத்தமன் என்று ருசுப படுத்த எண்ணி, "என் அயலான் யார்?" என்று கேட்டான்.

ஜெருசலேமில் இருந்து ஜெரிக்கோவுக்கு ஒருமனிதன் பயணமானான். போகிற வழியில் கள்வர் அவனைப் பிடித்து, வாரும் அடித்து, அவனிடம் இருந்த பணத்தையும் பறித்துக் கொண்டு போய்விட்டார்கள்.

அவ்வழியே ஒரு யூகுரு போனார். கள்வர் கையிற்பட்டவனைக் கண்டாலும் காணாததுபோல அவர் போய்விட்டார். ஒரு லேவியற்பிள்ளை போனான். வழியிற் கிடந்தவன் மட்டில் அவன் இரங்கவில்லை. சமாரித்தன் ஒருவன் வந்தான். வழியிற் கிடந்தவனைக் கண்டு இரங்கினான். அவனுடைய காயங்களுக்கு மருந்து போட்டான். அவனைத் தனது கழுதையில் ஏற்றிக் கொண்டு போய்ச் சத்திரத்தில் விட்டுப் பாராமரிக்கச் செலவு கொடுத்தான்.

"கள்வரிடம் அகப்பட்டவனுக்கு எவன் அயலான்?" என்று கேட்டார் யேசு.

"சமாரித்தன்"

"நீயும் போய் அப்படிச் செய்" என்றார் யேசு.

## சொன்னபடி செய்த சின்னன்

சின்னன் கீழ்ப்படிதல் உள்ள ஓர் பையன். அவன் சொன்னதைச் சொன்னபடி கேட்டு நடப்பான். ஆனால், அவனுக்குச் சமயோசிதமாக ஆய்ந்தோய்ந்து செய்யும் அறிவில்லை அவனுக்கு அவன் தாயார் நல்ல புத்தி புகட்ட எவ்வளவோ பாடுபட்டாள். ஒருநாள் அவனைச் சமீபத்தில் உள்ள பாட்டியின் வீட்டுக்கு அனுப்பினாள்.

பிறகு அன்றுமாலை சின்னன் வீட்டிற்குத் திரும்பும் பொழுது, அவன் பாட்டி அவனிடம் ஒரு ஊசியைக் கொடுத்து அதைத் தாயிடம் கொண்டு போய்க்கொடுக்கும்படி சொன்னாள். அவன் அதைப்பெற்றுக் கொண்டுபோகும வழியில் ஒருவன் ஓர் வைக்கோற் கட்டுக் கொண்டு போனான். சின்னன அந்த ஊசியை வைக்கோற் கட்டில் குத்தி வைத்து, வீட்டுப் பக்கமாகப் போகும் பொழுது அதை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால், வீட்டுப்பக்கம் சென்றபோது ஊசியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இதைக் கேட்டதும் சின்னனின் தாய் அவனை நோக்கி: நீ என்ன பெரும் முட்டாளாய் இருக்கிறாய்; அதனை உனது சட்டையில் ஏன் சொருகிக் கொண்டு வரக்கூடாது? என்றாள். இனிமேல் அப்படிச் செய்கிறேன் என்றான் சின்னன்.

இரண்டாம்நாளும் சின்னன் பாட்டி வீடு சென்றான். அன்று பாட்டி அவன் வீட்டிற்குத் திரும்பும் போது ஒரு கத்தியைக் கொடுத்தாள். சின்னன் அதைச் சட்டையில் செருகிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான். அதனால் சட்டை கிழிந்ததுடன் கத்தியும் எங்கோ விழுந்து விட்டது. இந்த விபரம் கேட்ட தாய், நீ என்ன படு முட்டாளாய் இருக்கிறாய்; அதனைச் சட்டைப் பையில வைத்துக் கொண்டு வந்திருக்கப்படாதா? என்றாள். சின்னன் சரி, இனிமேல் அப்படியே செய்வேன் அம்மா என்றான்.

மூன்றாம் நாள் அவன் பாட்டியின் வீட்டுக்குப் போன போது, பாட்டி ஒரு நாய்க் குட்டியைக் கொடுத்தாள். சின்னன் அதைச் சட்டைப் பைக்குள் திணித்தான். நாய்க் குட்டி வாள், வாள் என்று கத்திற்று. ஆயினும் சொன்னதைத் தட்டக் கூடாது என்ற நினைவுடன் சின்னன் அதனை அமுக்கிப் பையினுள் வைத்துக் கொண்டு சென்றான். நாய்க் குட்டி மூச்சு விட முடியாமல் திணறி இறந்து போயிற்று. இதைக் கேட்ட தாய் வருத்தமுற்று: என்ன இவ்வளவு தெரியாமல் இருக்கிறாயே; நாய்க் குட்டியின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி அதனைக் கையில் பிடித்துக் கொண்டு அல்லவோ வர வேண்டும் என்றாள். சின்னன் சரி, அம்மா இப்போது தெரிந்தது; இனிமேல் அப்படியே செய்கிறேன் என்றான்.

அதன்பின் ஒருநாள் அவன் பாட்டியின் வீட்டுக்குச் சென்றபோது, பாட்டி சுவையுள்ள அப்பம் ஒன்று சுட்டு வீட்டுக்குக் கொண்டுபோ என்று கொடுத்தாள். சின்னன் அதை ஓர் கயிற்றில கட்டித் தெருநீளம இழுத்துச்சென்றான். அப்பம் மணத்தினால் நாய்களும் அதனைத் தொடர்ந்து சென்று கடித்துத் தின்று விட்டன. சின்னனின் தாய் இதைக் கேட்டதும் நகைத்து, உன்னைப் போலக் கோமாளி எவன் இருக்கிறான்? அதை நன்றாய்த் தாளில் பொதிந்து தலையில் வைத்துக் கொண்டு வந்தால் என்ன! என்றாள். சின்னன் இனிமேல் அப்படிச் செய்ய ஒருநாளும் தவறமாட்டேன் என்றான்.

மறுநாள் பாட்டி கொஞ்சம் வெண்ணெயை அவனிடம் கொடுத்து வீட்டுக்குக் கொண்டு போகச் சொன்னாள். சின்னன் அதை ஒருதாளில் பொதிந்து தலைமீது வைத்துக்கொண்டு புறப்பட்டான். வெயில் நேரமானதால் வெண்ணெய் உருகி அவன் தலைமேல் வழிந்து தோள்களிலும, சட்டையிலும ஒழுகிற்று. வெண்ணெய் உருகிக் கசிந்ததால் கண்களும் கரிக்கத் தொடங்கின. இவ்வளவு துன்பங்களுக்கிடையே வெண்ணெய் பொதிந்த தாள் வீடு போய்ச் சேர்ந்தது. உள்ளே வெண்ணெய்மட்டும் இல்லை. இந்தத்தடவை சின்னனின் தாய் சினங்கொண்டு உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புத்திவர மாட்டேன் என்கிறதே; சொன்னதைச் செய்ய மட்டுந்தான் உனக்குத் தெரியுமா? எதை எதை எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிய வேண்டாமா என்றாள்.

**மரீன் ஜெயமணி தேவசகாயம்,**
சூராவத்தை.

---

● திருவாங்கூரிலேகம்யூனிஸ்தார்கள் சென்றவாரம்ஆரம்பித்த பஸ் வேலை நிறுத்தம் தோல்வியடைந்துவிட்டது. பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. சனங்களும் அவைகளைப் பகிஷ்கரிக்க மறுத்துவிட்டு அவைகளில் ஏறிச் செல்லுகிறார்கள். கம்யூனிஸ்தார்களும், தொழிலாளர்களும் ஓடும்பஸ்களுக்கு முன்பாகப் படுத்து, அவற்றைத் தடுக்க முயன்றது பலிக்கவில்லை.

● அன்னுபாகர் எனும்மாது கம்யூனிஸ்தஆட்சியிலுள்ள ருமேனியாவின வெளிநாட்டுமந்திரியாக இருந்தவள் அப்போது ருஷிய சர்வாதிகாரியாயிருந்த ஸ்ராலினின் நண்பர்களில்ஒருத்தியாகவும் இருந்தவள். இவள் மந்திரி பதவியிலிருந்து வீழ்ச்சியடைந்தபிறது ஓர் அரசாங்க கிளாக்குவாய் வேலை செய்துவந்தாள். தற்போது இவள் கைது செய்யப்பெற்று வழக்குத்தொடரப்பட்டிருக்கின்றாள்.

## மாசற்ற குடும்பத்தின் தேசுற்ற பாலியர்

(தமிழாக்கம்: பி. இராசையா, காவலூர்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

நமது அன்னையாம் திருச்சபை தோமினிக் சவியோவின் இணையற்ற வாழ்க்கையைப் பலஆண்டுகளாக இழுக்கற ஆராய்ந்தது. அதன்பயனாக அவர் ஓர்உத்தமர்என உணர்ந்தது. ஆண்டவனால் அருளப்பட்ட குறுகிய கால உலகவாழ்வில் பலனுள்ள பல புண்ணியக்கிரியைகளைத் தாளாது செய்து சீரியனாய்த்திகழ்தார் எனக் கண்டது. இதன்முடிவாகத் திருச்சபை இவர் அர்ச்சியசிஷ்டர்சபையில் ஓர்அங்கத்தவர்என்பதை அங்கீகரித்தது. தோமினிக் ஓர்மாணவ திருத்தொண்டர் என்றுபிரகடனம்செய்தது. அவர்இன்று மாணவருலகத்துக்கோர் மங்காத்தீபமாய் விளங்குகின்றார்.

நாங்கள் அனைவரும திருத்தொண்டர் ஆகவேண்டும்என்பதே தேவநியமம். இதைஉணர்ந்து அர்ச்சியசிட்டர் ஆவதற்கு நம்முள்முனைந்து செயலாற்றுபவர் எத்தனைபேர்? சாவானபாவத்தைத் தவிர்ப்பதுடன நாம் திருப்தி அடைகிறோம். நரகநெருப்பிற்கு விலகினாற் போதுமென்றிருக்கிறோம. ஆனால், சருவேசுரன் விருப்பியவிதம் எமது கடமையைத் தாளாதுசெய்ய நிதம் தவறிவிடுகிறோம். எனவே எமது மதியீனம!

தமதுஎண்ணத்தைஉணர்த்தவன்றோ அமலன் எம்மிடையே சிலருக்கு விசேஷ வரப்பிரசாதங்களை அருளுகின்றார். ஒருசிலாது ஆத்துமங்களை எம்மிடையே உயர்த்தச்சித்தமாகின்றார். அவர்களும் அதைததொடர்ந்து தங்கள்கடமைகளைப் பணிவுடன் குறைவின்றிச் செய்துமுடிக்கின்றனர். அவர்களது பணியின்தன்மையைத் திருச்சபைதேவவேண்டுதலுடன் தீரஆராய்கிறது. பின்னர்திருச்சபை அவர்களைப் பலிபீடத்தில்வைத்துப் பூசிக்கத்தக்க கௌரவத்துக்கு உயர்த்துகின்றது. அவர்களின் சீவியத்தைப் போன்று நாங்களும எங்கள்சீவியத்தைச் சீர்ப்படுத்தவேண்டாமா? இதற்காகவன்றோ திருச்சபை அவர்களை எங்களுக்குத் தேடற்கரிய வாழ்க்கை உதாரணங்களாக அருளுகின்றது.

இவ்வையகத்துள் எத்துறையை நோக்கிலும் அத்துறையில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவன் பதஞ்சேர்ந்த அர்ச்சியசிட்டர்களைக் காணலாம. துறவிகளாய், கன்னியராய், வேதபாரகராய், பாப்புமாராய், மேற்றிராணிமாராய், குருமாராய் இவ்வையகத்துள் தூய வாழ்வுதாங்கி விண்ணுலகெய்திப் பரிசுத்தபதவி அடைந்தோர்பலர். அரசர்களாய், ஆண்டிகளாய் வாழ்ந்து அமலபதஞ்சேர்ந்து அர்ச்சியசிட்டர்களானோர் அனந்தம். இவர்களதுவாழ்க்கை உதாரணங்கள் ஒவ்வொன்றும் நாம் அர்ச்சியசிட்டவாழ்வை அடையக்கூடிய வழியைக்காட்டி, "நீ ஏன் அதைஅடைய முடியாது?" என்று எம்மைவிழித்து வினவுகின்றதன்றோ!

பண்டைக்காலத்திலும் பாடசாலைகள் இருந்தன. ஆனால், சிலருக்கே அப்பாடசாலைகளிற்படிக்க வசதி அளிக்கப்பட்டது. இன்றோ நிலைமைமுற்றிலும் மாறிவிட்டது கட்டாயக்கல்வி முறை நடைமுறைக்கு வந்ததிலிருந்து கணக்கற்றபிள்ளைகள் கல்விகற்கின்றனர். எவ்வயது இளைஞர்களும் எவ்வித பேதமுமின்றித் தாங்கள் விரும்பிய பாடசாலைக்குச்சென்று கல்விபயில்கின்றனர். இவ்விதமாணவர்க்கு முன்மாதிரியாக இறைவன் இன்று ஓர் அர்ச்சியசிட்டவரை அவர்களிடையே உயர்த்தியிருக்கிறார். இவர்தான் தோமினிக்சவியோ. தனதுபாடங்களைப் படித்தல், விளையாடுதலாகிய இன்ன பிற மாணவஅலுவல்களிலேயே இவர் தனதுகுறுகிகால உலகவாழ்க்கையைக் கழித்துக் கதிமோட்சம்சேர்ந்தார்.

## மரியன்னையின் மங்களவிழா

மாமரிஅன்னையின் அமலோற்பவ சத்தியநிர்ணய நூற்றாண்டுநிறைவாகிய மரியாயின் இப்புனிதவருடத்திலே கத்தோலிக்கஉலகின் மற்றிடங்களிற்போலவே ஏழாலை, அர்ச். இசிதோர் கோவில் கிறீஸ்தவர்களும, சூராவத்தை, அர்ச். தெரேசம்மாள்கோவில் கிறீஸ்தவர்களும் ஒன்றுசேர்ந்து மரியன்னையின் இந்தமங்கலவிழாவைச் சென்ற 21-8-54 சனிவாரம பக்திச்சிறப்பாகக் கொண்டாடினார்கள். அலுகாலை 7 மணிக்குக் கட்டளைக்குரவர் வண. ரி. ஜோண சிங்காரயர் சுவாமியவர்கள் அர்ச். இசிதோர் கோவிலில் பாடற்பூசை நிறைவேற்றினர். அதிலே கோவிற்பாடகர்குழாம் இன்பகரமாக ஞானகீதங்கள் பாடியது.

அன்று பிற்பகல் 4மணிவரையில் அர்ச். தெரேசம்மாள் கோவிலிலிருந்து மாசற்ற தேவஅன்னையின் பெரிய ஊர்வலமொன்று ஆரம்பமாயிற்று. இதனை முன்னிட்டு அர்ச். தெரேசம்மாள்கோவிலும், பலிபீடமும, சுற்றாடலும் நீல-வெண்கொடிகளாலும், புடவைகளாலும் என்றுமில்லாதவிதமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அமலநாயகியின் திருச்சுரூபத்தைச் சிங்காரத்தேரொன்றில் எழுந்தருளச்செய்து, நான்கு பெண்மணிகள் தாங்கிநிற்க, கட்டளைக்குரவர் ஊர்வலத்தைப் பயபக்தியுடன் ஆரம்பித்துவைத்தார். ஒலிபரப்பியின் துணையோடு செபமாலை சொல்லப்பட்டும், இடையிடையே இனியகீதங்கள் படிக்கப்பட்டும பக்திப்பரவசமளிக்க, பன்னூற்றுக்கணக்கான பாடசாலைச் சிறார்களும்,ஏனையவர்களும்இருவர்ணக் கொடிகள் தாங்கிச்சென்றகாட்சியானது ஊர்தான்நகருதோஎன்று சொல்லும்படியான உன்னதகாட்சியாயிற்று. ஊர்வலவீதியானது அழகிய பந்தர்களாலும், பலவர்ணக்கொடிகள், மகர தோரணங்களாலும சிங்காரிக்கப்பெற்று எவரையுமே பரவசமடையச் செய்தது.

சுமார்இரண்டுமைல்நீளமான இந்த ஊர்வலம அர்ச். இசிதோர்கோவிலை அண்மியதும் மணிகள் ஆர்ப்பரிக்க, தீபங்கள்பிரகாசிக்க, மாதா அங்கு மனோகரமாக வரவேற்கப்பெற்று நவமான பீடமொன்றில் எழுந்தருளவே, காணிக்கைமந்திரத்தோடும, தேவநற்கருணைஆசீர்வாதத்தோடும் திருவிழா பூர்த்தியாயிற்று. மறுநாள் ஞாயிறுவாரம் ஆண்டுதோறும் நடைபெறுவதிலும் அதிசிறப்பாக வண. கட்டளைக் குரவர்தலைமையிலும, வண. பி. ஏபிரகாம்சுவாமியவர்கள் உதவியோடும் திவ்வியசற்பிரசாத சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது.

மரியாயின் புனிதவருட விழாவுக்கு மகுடம் வைத்தாற்போல அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை (29-8-54) மாலை அர்ச். இசிதோர் பாடசாலை மாணவர்களால், "பரலோக ஆச்சி" என்னும் சிறந்தநாடகம் நடித்துக் காட்டப்பெற்றது. அநேகமானோர் நாடகத்துக்குச் சமுகந்தந்து அகமிக மகிழ்ந்தனர்.

— நிருபர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திவ்வியயேசுவின் தயாளப்பெருக்கினாலும், அவரதுமாசற்ற சதாசகாயமாதாவினதும், அவர்கைத்தாதை சூசைமாமுனிவரதும், மற்றும்கோடியற்புத வரத்தராம் அர்ச். அந்தோனியார், அர்ச். சின்னத் தெரேசம்மாள், அர்ச். பத்தாம்பத்திநாதரினதும், பரிசுத்த சந்தானுள் நாயகியினதும் விசேஷ மன்றாட்டினாலும் என்உத்தியோக சம்பந்தமான பயங்கர இடையூறிலிருந்து அடியானை அதிசயிக்கத்தக்க விதமாகக் காப்பாற்றியதற்காக நன்றியறிந்த ஸ்தோத்திரமாக நேர்த்திப்படி இதைப் பிரசுரம் பண்ணுகிறேன்.

வங்காலை A. A. MORAES,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமான் பஸ்தியான்பிள்ளை மனுவேல்பிள்ளை (தம்பு) அவர்களின்

# தேகவியோகம்

ஊர்காவற்றுறை, காம்பனை ஜன்ன பதியாகக்கொண்டவராய், பலராலும் நன்கறியப் பெற்றவராய், செல்வஞ்செல்வாக் குடையவராய், எவ்வெவராலும் நன்குமதிக்கப்பெற்றவராய் விளங்கியவரும, கொழும்பு பஸ்தியான்கம்பெனி லிமிற்றெட்எனற பிரபலஇறக்குமதி வாத்தகஸ்தாபனத்தின் முன்னாள்நிர்வாகியாகவும, அக்கிராசனராகவும் இருந்து இளைப்பாறியவருமான இவா தமது வயோதிகபருவத்தில் கடந்த மூன்றுமாதகாலமாய் நோய்வாய்ப்பட்டிருந்து தேவதிரவிய அநுமானங்களைக் குறைவறப்பெற்றுக் கொழும்பு, வெள்ளவத்தையில் 1954-ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ந்திகதி திங்கட்கிழமைமாலை மரணத்திரையுள் மறைந்தாரெனும் இலங்கைவானொலியின் அமங்கல செய்தி இலங்கையிலெவர்க்குமே பெருங்கவலையைத் தருவதாயிற்று.

இவர் திருமாண பேதுருப்பிள்ளை சுவாமபிள்ளையின் புதல்வியாகிய திருமதி பொன்னமமாவைத் தமது வாழ்க்கைத்துணைவியாகக்கொணடு நனமக்கட் பேற்றைப்பெற்றுச் சீராய்ச்சிறப்பாய், பேராய்ப்பெருமையாய் வாழ்ந்திருந்தவர். பஞ்சபெரும விழுதுகளையும், பலஇளம்விழுதுகளையுமுடைய ஆலாவிருக்ஷம்போல நாலுபுதல்வர்கள், ஒருபுதல்வி, ஏராளமான பேரப்பிள்ளைகளையும்கொண்ட தமது பெரிய குடும்பத்தினர் புடைசூழ்ந்துநின்று தமக்காகச்செபிக்க, நன்றாக முற்றிப்பழுத்த இலை மரத்திலிருந்து உதிர்வதுபோலத் தமதுஎண்பதாவதுவயதில் பரமபதம் அடைந்த இப்பெரியார் பாக்கியம்பெற்றவரென்றால் மிகையாகாது.

தாம் பொறுப்புள்ள தந்தையென்பதையுணர்ந்து தம்மக்களை வியாபார முற்போக்கில் திறம்படப் பயிற்றுவித்த தின்பயனாகத் தங்கள்ஜனனஊரில் வியாபாரத்துறையில் இவர்களுக்கு நிகர் எவருமில்லை என்பதற்கொப்பத் தமது சிரேஷ்டபுதல்வன் திரு. எம். சிங்கராயர்அவாகள் நீர்கொழும்பில் சிறப்புறநடத்திவரும் பிரபலபுடவைக் கடையாகிய வத்திக்கான் சிற்றி ஸ்ரோர்ஸ்என்ற வியாபாரஸ்தாபனத்தை நிர்மாணித்தவரும், இரண்டாவது புத்திரன் திரு. எம். ஜே. வேதநாயகம்அவர்கள் நடத்திவரும் கொழும்பு எம். ஜே. வேதநாயகம் அன்கம்பெனியை ஸ்தாபித்தவரும் இப்பெரியாரே. கைத்தொழில் உற்பத்தியாளரும், பிரபல இறக்குமதியாளருமாகிய கொழும்பு, பஸ்தியான் அன்கம்பெனி லிமிற்றெட்என்ற பிரபலவர்த்தக ஸ்தாபனத்தின் அதிகப்பங்கு உடைமையாளரும், மனேஜிங்டிறெக்றருமான திரு. எம். பஸ்தியான் அவர்கள் இவரின்மூன்றாம்புதல்வர். அரசாங்க கன்றாக்டரும், இன்ஷூறன்ஸ் ஏஜண்டும், இன்டென்டிங் ஏஜன்றுமாகக் தொழில் நடத்திவரும் திரு. எம். மரியநாயகம் அவர்கள் இப்பெரியாரின் நான்காவது புத்திரராவர்.

இவரின்மேனி மறுநாள்சாயங்காலம் விலையுயர்ந்த அழகியபேழையில் வைக்கப்பெற்று அர்ச். லோறன்ஸ்தேவாலயத்தின் வண. கட்டளைக் குருவானவரால் இல்லத்தில் துக்கசங்கீதம்பாடி ஆசீர்வாதங்கூறப்பட்டபின், பூதவுடல் வைக்கப்பட்ட இரதம் ஊர்வலமாகநகர, எண்ணற்றஅன்பர்கள் தங்கள்தங்கள் வாகனங்களில் பின்தொடரக் கனத்தைச் சேமக்காலைசேர்ந்ததும், வண. உதவிக்கட்டளைக்குருவானவர் தமது பாடகர்குழாத்தோடு துக்கசங்கீதம் பாடிச்செல்லப் பெருந்தொகையான மலர்வளையங்களைமுன் எடுத்துச்செல்ல, சேமக்காலையின் ஆலயத்தில்அந்திய திருச்சடங்குகள் நிறைவேறியதும் நான்குபுத்திரரும்தம்தந்தையின் மேனியைத் தக்க அன்புமரியாதையோடு சேமக்காலை கொண்டுசென்றதும் பெரியோர்கள், இனசனர், பலவிடங்களிலுமிருந்து வந்திருந்த உத்தியோகஸ்தர்கள், வர்த்தகஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், அன்பர்களாகப் புடைசூழ்ந்த அனுதாபிகள்மத்தியில் இறுதி ஆசீர்வாதத்தோடு குடும்பகல்லறையில் நல்லடக்கம்செய்யப்பெற்றதும் கணகொள்ளாத் துயரக்காட்சியாக இருந்தது.

இவரின்பிரிவாற்றாது கவலையிலாழ்ந்திருக்கும நாயகியோடும், பிள்ளைகளோடும், மற்றுமுள்ள இனசனரோடும் நாமும்அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரின்ஆன்மா நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவதாக!

— மரண அறிக்கை

## மரண சங்கதி

காவலூர் உதயதிசைவாசரான திரு. குருசுமுத்து யோண்பிள்ளை அவர்களின் சிரேஷ்டபுத்திரியும், சென்ற் மேரீஸ்கலாசாலை மாணவியுமான லூர்துமேரி (றதிஅம்மா) பத்துநாட்களாக நோயுற்று அந்திமதேவதிரவிய அநுமானங்களை நல்லறிவோடு பெற்றுச சென்ற 21-8-54 சனிக்கிழமை மரணத்திரையுள் மறைபலாயினு. இவவின்பிரேதமானது மறுநாள்சாயந்தரம் உள்ளூரிலும், பிறவூர்களிலுமிருந்துவந்துகூடிய இனசனரும், மற்றும் உடன்மாணவிகளும் சமுகமாகக் கட்டளைக்குரவர் வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்கள் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, அர்ச். அந்தோனியார் கோவில் கொணடுசென்று அந்திம திருச்சடங்குகள் நிறைவேற்றியபின் சேமக்காலையில் சுவாமியவர்கள்கடைசி ஆசீர்வாதம்கூறிநிற்கப் புதியகல்லறையில் பூமிதானஞ்செய்யப்பட்டது. இவவைஇழந்துபாதவிக்கும் பெற்றாருடனும், சகோதரர் இனசனரோடும் நாமும்அநுதாபப்படுகிறேன்.

R. I. P. — நிருபர்

## நாளு சங்கதிகள்

● பத்தாம்பத்திநாத பாப்பானவர் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்றபோது, நிறைவேறிய திவ்வியபூசையில் பிரபலசங்கீத மேதாவியான மொன்சிஞ்ஞோர் பெறோஸிசுவாமியார் சங்கீதக்கோஷ்டிக்குத் தலைமைவகித்தார். இற்றைக்கு 51 வருடங்களின்முன்னர் பத்தாம்பத்திநாதர்பாப்பரசராகத் திருமுடிசூட்டியபோது நிகழ்ந்தவைபவத்திலும் அவரே சங்கீதகோஷ்டிக்குத் தலைமைவகித்திருந்தார்.

● ஒல்லாந்தின் கத்தோலிக்கமக்களால் வருடந்தோறும் அந்நாட்டிலே "வேதாகமவாரம்" ஒன்று ஒழுங்குபடுத்தி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வருடம் அங்கு சிலவாரங்களின்முன் நடத்தப்பட்ட வேதாகம வாரத்தில் 2,50,000 வேதப்புத்தகங்கள் விலைப்படலாயின.

● மரியாயின் இப்புனித வருடத்திலே எத்தியோப்பியாவைச் சேர்ந்த அஸாப்துறைமுகத்தில் அமைந்துள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற தம்பத்தின் மீது தேவதாயாரின் திருச்சுரூபம் ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. அங்கு தேவதாயார் "செங்கடலின் மாதா" என வணங்கப்பெற்றுவருவார்.

● இத்தாலியின் முன்னாள் நீதிமந்திரியாரான 67வயதுடைய சிஞ்ஞோர் அடோண் ஸோலிஅவர்கள் காலஞ்சென்ற ஆல்சிதேதே காஸ்பெறி அவர்களிடமாக இத்தாலிய கிறீஸ்தவ ஜனநாயககட்சியின் தலைவராகத் தெரியப்பெற்றிருக்கின்றார். ஓர் செனற்றரும், நியாயவாதியுமான இவர் இத்தாலிய கிறீஸ்தவ ஜனநாயக இயக்கத்தை உண்டுபண்ணியவர்களில் ஒருவராவர்.

## கனவா? அன்றேல்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டின் முக்கியமான இடத்தில் ஸ்தாபித்து, யேசுவைக் குடும்பத்தின் அரசராகவும், தந்தையாகவும் அங்கீகரித்து ஒப்புக்கொடுக்கும் செபத்தைக் குருவானவரோ, அல்லது குடும்பத்தலைவனோ வாசிக்கின்றனர். அதிலிருந்து குடும்பத்தினர்யாவரும எல்லாவற்றையும் யேசுவின்திருஇருதய மகிமைக்காகவே செய்கின்றனர்.

இதேபோலத்தான் மரியாயின் மாசற்றஇருதயத்துக்கும் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கலாம். தாயையும்மகனையும் பிரிக்கக்கூடாது. மகன் அரசுபுரியும் இடத்தில் தாய்அரசியாக விளங்கவேண்டும். தேவஅன்னையை அரசியாக்கும் இல்லங்களுக்குச் சமாதானமும், சந்தோஷமும், சகலவிதஆசீர்வாதங்களும் கிடைக்கும். பாவிகளின் அடைக்கலமும், துயருற்றோரைத் தேற்றுபவரும், கிறீஸ்தவர்களுடைய சகாயமும், வியாதிக்காரருக்கு ஆரோக்கியமுமான தேவஅன்னையைத் தங்கள் இல்லங்களில் அரசியாக்கி அவருக்குரிய கேசத்தையும், வந்தனையையும் சமர்ப்பிப்போரை அவரும்தாய்க்குரிய அன்புடன் பராமரித்துவருவார். இத்தகைய குடும்பங்களில் நிலவும்சமாதானமும், சந்தோஷமும் ஏனையகுடும்பங்களிலும் பரவும். நாளடைவில் உலகமே நலம்பெறும்.

### புற்றுநோய்க்கு

## ஓர் புதியமருந்து

பலஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து பலன்கண்ட ஔஷதம் யோகீஸ்வரரசம். புற்றுநோயும் எந்தவிதமான கிரந்தி, புண், பிளவைகளும் இந்தயோகீஸ்வரரசங்கண்ட மாத்திரத்தில் தீர்ந்துவிடும்.

பொ. செல்லையா வைத்தியர்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) | |
| இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடித மூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்

● நியூயோர்க்நகரிலுள்ள எமர்சன் றேடியோ-போனோகிறாப் கம்பெனி உலகிலேயே மிகச்சிறியதான றேடியோஒன்றைத் தயாரித்திருக்கிறது இதன் அகலம ஆறு அங்குலம். உயரம் ஒன்றரை அங்குலம். நிறை ஒரு றாத்தல். பற்றறியினால் இயங்குவது. இதன்விலை நாற்பதுடலராகும்.

● மத்தியஅமெரிக்காவிலே சமீபத்தில் கம்யூனிஸ்த ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த குவாட்டேமாலாநாட்டின் புதியஅரசாங்கம் சகலவிதமான கம்யூனிஸத்தையும் சட்டவிரோதமானதென்று சென்றபுதனகிழமை விலக்கியிருக்கின்றது. அதனால் சகலமான கம்யூனிஸ்த எடுப்புகளும் அங்குதடுக்கப்பட்டுள்ளன.

# AUCTION SALE

By virtue of the Commission issued to me in partition case No. 10589 D.C. Jaffna, I shall sell by Public Auction in terms of Partition Act No 16 of 1951 on Saturday, 16th October, 1954 at 4 p.m. at the spot the undermentioned property:

All that house and premises situated at Third Cross Street, Jaffna Town in the Parish of Chundicully in the Division and District of Jaffna, Northern Province in extent Two (2) Lms. V.C. and Eleven and Eleven over Sixteen Kulies ($11\frac{11}{16}$) kls. with its appurtenances and bounded on the East and North by the property of the heirs of Mary Josephine of W. B. Kanagaratna on the West by Third Cross Street and on the South by Bankshall Street.

**S. Ratnasabapathy,**
Commissioner of Sales & Valuator.
42, Colombogam Road,
Jaffna, 1-9 54.

## அரசாங்க அறிவித்தல்

### வன பரிபாலனப் பகுதி

N. 2351-(1) 110 கழித்த பாலை, முதிரை, காட்டாமணக்கு, கல்மில்ல, ஞாணை, சூரியமாரை, பொனமுல்ல மரங்களும்: 1403·3 கனஅடி; 23 கூறுகள் அடங்கிய 1853 கழித்த அரிந்த மரத்துண்டுகள்: 1120·6 கனஅடி—ஒவ்வொருகூறும் ஏறக்குறைய 50 கனஅடியும் அதற்குமேலும்; 2 கூறுகள்அடங்கிய 100 அரிந்த மரத்துண்டுகள்: 250·0 கனஅடி —ஒவ்வொரு கூறும் ஏறக்குறைய 125·0 கனஅடி முதலியன 10-9-54 காலை 10 மணி தொடக்கம் மாங்குளம் அரசினர் மரக்காலையில் பகிரங்கஏலத்தில் விற்கப்படும்.

N. 2351-(2) 11-9-54 காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர்மரக்காலையில் 100 பாலை, ஞாணை, முதிரை மரங்கள்; 10 கூறுகள்அடங்கிய அரிந்தமரங்கள் முதலியன பகிரங்கஏலத்தில் விற்கப்படும்.

விற்பனவிற்குமுன் மரங்களைப்பார்க்க விரும்புவோர் அவ்வவ் டிப்போ அதிகாரிகளின் அனுமதியுடன் பார்வையிடுவதோடு, அவர்களிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளையும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எனக்குவந்த குதிவாத வருத்தத்தின் போது சதாசகாயமாதாவுக்கு நவநாள் செய்து மன்றாடிக்கேட்டதின்பேரில் அவ் வருத்தம் இல்லாமல் போய்விட்டது. அத்துடன் என்குடும்பகஷ்டமும் நீங்கினது. அதற்கு நன்றியறிதலாக நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன். சதா சகாயமாதாவின்நாமம் உலகம் எங்கும் வாழ்த்தப்படக்கடவது.

செம்பியன்பற்று ச. பேதுருப்பிள்ளை

* * *

எனது தம்பிக்கு ஏற்பட்ட கடும்வருத்தைக் குணமாக்கமுடியாமல் பல வைத்தியர்களாலும் கைவிடப்பட்டுஇருந்தவேளையில் அர்ச். வனத்துச் சின்னப்பரிடம் யான்வைத்த நம்பிக்கையின்மூலம் கேட்டுக்கொண்டபோது அவர் எனதுதம்பிக்குப் பூரணசுகம் கொடுத்ததற்கு என்நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முதல்வனவாசியும், கடும்தபஞானியுமாகிய அர்ச். வனத்துச்சின்னப்பரின் மகிமை எங்கும் இலங்குவதாக!

அர்ச். வனத்துச்சின்னப்பரின் அடிமை
எஸ். பி.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 2-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org